Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாஸன் எழுதுகிறார்.)

கூத்தின்மாதுபாடினகருத்தாவது:- தம்பூர் சுருதிசரியாகச் சேர்ந்திருக்கும்போது ஆட்டமும் நன்ருக ஓடுகிறது. அதன் சுதியை அதிகமாக உயர்த்தாதே. அதிகம்தாழ்த்தவும் கூடாது. அப்பொழுது நாங்கள்மனிதாது மனதை ஆடிக்கொண்டுபோவோம்.

தந்தியை அதிகமாக முறுக்கினுல் ஒடிந்துபோய் பாட்டைகிறத்துகிறது. தந்தி நெகிழ்ந்திருந்தால் பேசாமல் போய் கானத்தைக்கெடுக்கிறது. ஆகையால் சுதி அதிகமாக உயர்ந்தாவது தாழ்ந்தாவது இருக்கக்கூடாது

என்று இவ்வித வீண்பாட்டுகளைப் பாடிக்கொண்டு, தான்பாடினது தன் கூட்டத்தைத் தவிர வேருெருவர் காதில் விழுந்திருக்குமென்று கனவிலும் நினையாமற்போயினள். ஆனுல் புத்தர் இதைக் கேட்டு சில வேளைகளில் அறிவிலிகளும் அறிவுள்ளோருக்குப் புத்தி புகட்டுகிருர்கள். அறிவாகிய சங்கீதம் உண்டாவதற்காக இவ்வுடலாகிய தந்தியை அதிகமாக முறுக்குகிறேன். நான் உண்மையைக்கண்டு பிடிக்கிற தருணத்தில் என் கண்கள் இருளுகின்றன. எனக்குப்பலம் வேண்டிய முக்கிய சமயத்தில் நான் க்ஷீணத்தையடைகிறேன். இப்போது எனக்கு யாராவது உதவி செய்வார்களானுல் மிக நன்மையா யிருக்குமென்ருர்.

அந்த ஆற்றருகில் மிகுந்த பக்திமானும் தனிகனும் ஏழைகளுக்குத் தோழனுமுள்ள ஒருபிரபு வசித்தான். அவன் குடும்பத்தினின்றுதான் அந்த ஊருக்கு ஸெநானியென்று பெயர் வந்தது. அவ்விடத்துப் பெண்களிலெல்லாம் மிகுந்த அழகுடைய சுஜாதை என்பவளை மணந்தவன் திருப்தியாயும் சுகமாயும் வாழ்ந்து வந்தான். அந்த சுஜாதை அமரிக்கையாயும் உண்மையுடையவளாயும் கள்ளங்கபடின்றி தயவோடு எல்லாரிடத்தும் இனிய வார்த்தையும் களித்தமுகமும் உடையவளாயும் ஸ்திரீகள்ரத்தினம் போல் விளங்கி, தனது அமைதியான வீட்டில் தன்நாயகனுடன் இல்லறம் நடாத்தி வந்தாள். ஆனுல் அவர்கள் வீட்டை சந்தோஷப்படுத்த ஒரு புத்திரனுண்டாகவில்லை. அதற்காக அவர்கள் அநேக தெய்வங்களைப் பிரார்த்தித்ததுமன்றி அருகிலிருந்த காட்டுத்தெய்வத்திற்கும் தானொரு ஆண் குழந்தையைப் பெற்ருல் தேவாமிர்தத்திற்கு ஒப்பான நிவேதனம் செய்து பொற்கிண்ணத்திற் கொடுப்பதாக வேண்டிக்கொண்டாள். அவளும் சடுதியில் கர்ப்பந்தரித்து ஒரு ஆண்குழந்தையைப் பெற்ருள். பெற்ற மூன்று மாதத்திற்குள்ளாக ஒருநாள் ஒரு கையினுல் குழந்தையை மார்பிலணைத்துக்கொண்டு மற்ருெரு கையினுல் தலையில் வைத்திருக்கிறநிவேதனபாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு காட்டுத் தெய்வத்தின் கோயிலுக்கு நடந்து சென்ருள்.

அப்பொழுது முன்னுல் போய் இடத்தைப் பெருக்கி அலங்கரிப்பதற்காக அனுப்பப்பட்டிருந்த ராதை என்பவள் ஓடோடியும் திரும்பிவந்து தாயே! தெய்வம் நமக்குப் பிரத்தியட்சமாய் தன்னிடத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார். அவரது முகத்தைச் சுற்றி தேஜஸ் எப்படி விளங்குகிறது. தெய்வீகமான பார்வையுடன் எவ்வளவு சாந்தமாயும் உயர்வாயும் காண்கிருர் பார். இப்படித் தெய்வங்களை நேரில்ப்பார்க்க என்னபாக்கியம் பெற்ருேம்! என்ருள். சுஜாதையும் புத்தரைத் தெய்வமென்றெண்ணி மிகுந்த வணக்கத்துடன் அருகிற் சென்று நமஸ்கரித்து, பகவான் அடியாளிடத்திற் கிருபை கூர்ந்து ஏழையேன் கொண்டுவந்திருக்கும் அற்ப உணவைப் பெற்றுக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன் என்று பொற்கிண்ணத்தை அவர் முன்னிலையில் வைத்து அதில் நிவேதனத்தை யிட்டாள். அவள் வணக்கத்துடன் ஒதுங்கி நின்று களிக்க, அவர் ஒன்றும் பேசாமல் அதை உண்டார். அவ்வுணவின் விசேஷத்தால் அது உட்சென்றதும் புத்தருக்கு ஒரு உற்சாகமும் ஒரு திடமு முண்டாயிற்று. அதன் வீரியம் மனதிற்கு சென்ருற்போல அவரது புத்திக்கும் ஒரு தீக்ஷண்ய முண்டாகவே அவர் முகத்தில் ஒரு விசேஷ களை தோன்றிற்று. இதைக்கண்டு களிப்புற்ற சுஜாதை ஏழைகொடையும் ஐயனுக் கேற்றதோ வென்று மெதுவாகக்கேட்டாள்.

ஆனுல் புத்தர் அதைக்கவனியாமல் நீ எனக்குக் கொண்டுவந்ததென்னவென்று கேட்கசுஜாதை, சுவாமி! நான் நான்கு தொழுவத்திலிருந்து புதிதாக ஈன்ற நூறு பசுக்களின்பால் கொண்டு ஐம்பது பசுக்களை வளர்த்தேன். இவ்வைம்பதுகொண்டு வேறு இருபத்தைந்து வளர்த்தேன். அவைகளைக்கொண்டு பன்னிரண்டுமாடுகளையும் அவற்றிலிருந்து ஆறுமாடுகளையும் வளர்த்தேன். இவ் வாறு மாடுகள் தான் எம்மந்தைகளிலெல்லாம் உயர்ந்தவைகள். அவற்றின்பாலை,ஒவ்வொன்றும் ஒருமுத்து என்று சொல்லும்படி பொறுக்கி எடுத்த அரிசியுடன் நல்ல வாசனைத்திரவியங்களைச் சேர்த்து வெள்ளிப் பாத்திரங்களில் வைத்துப் பொங்கினேன். எனக்கொரு ஆண் குழந்தை பிறந்தால் செய்வதாகவேண்டிக்கொண்டபடி இத்தனையும் வெகு சிரத்தையுடன் செய்தேன். எனக்கு இப்பொழுது ஒரு புத்திரனிருக்கிருன். இனி எனக்கு வாழ்வெல்லாம் இன்பமே.

நமது புத்தர் குழந்தையை மூடியிருந்த வஸ்திரத்தை மெல்ல எடுத்து அதன் தலையிற் றம் கைகளை வைத்துக்கொண்டு உன் சந்தோஷம் வெகு நாள் நீடித்து நிற்கட்டும். வாழ்வின் பாரம் இவன் தலையில் மெதுவாக விழட்டும் என்று ஆசீர்வதித்து பின்னும், நீயாருக்கு உதவினையோ அவன் தேவனல்ல. உன்னைப்போல் ஒரு மானிடம் தான். முன்பொருகாலத்தில் இளவரசனாயிருந்தேன். இப்பொழுது மனிதரது அஞ்ஞானவிருளைப் போக்கடிக்கும் வெளிச்சத்தைத்தேடி அலைகிறேன். நான் நிச்சயமாய் அதைக் கண்டு பிடிப்பேன். இப்பொழுதுதான் அது என் மனதில் உதிக்கப்பார்த்தது. ஆனுலத்தருணத்தில் என்னுடம்பு க்ஷீணித்துப் படுத்துக்கொண்டது. நீ தந்த உணவினுல் பலமடைந்தேன். ஆனுல் வாழ்வதே உனக்கு இனிமையாக விருக்கிறதா, அன்பும் வாழ்வும் மட்டுமே போதுமோ என்று கேட்டார்.

---

## எதிர்பாராத சம்பவம்.

நானது அற்பிசி மீ 29 உ பின்னைத் தோப்பில் காலை 9-மணி சுமாருக்கு அரையரைக்கால் கெஜம் சுருக்கம் பதினொரு கெஜம் நீளம் உள்ள வேங்கை உத்திரம் ஒன்று சமுத்திரத்தில் வந்து ஒதுங்கியதை பரதகுலத்தவர்கள் கண்டு, சுமார் அறுபது பேர்வரையும் கூடி சமுத்திரத்தை விட்டு வெளியிலிழுத்து வைத்திருக்கிருர்கள். கிரயம் ரூ 200 க்கு மதிக்கப்படுகிறது என்று ஸ்ரீமான் சு. பு. மா. வெள்ளையா நாடார் எழுதுகிருர்.

---

## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம். அத்தியாயம் 25.

மகாத்மாஜி சென்ற வாரத்திய 'யங் இந்தியா' பத்திரிகையில் எழுதுவதாவது:—

பம்பாய்க்குச் செல்லும் மார்க்கத்தில் ரயில் வண்டி அலகபாத்தில் 45 நிமிஷ நேரம் தங்கியது. இந்த அவகாசத்தை நகரத்தைச் சுற்றிப்பார்க்க உபயோகித்துக்கொள்ள நான் தீர்மானித்தேன். நான் சில மருந்துகளும் வாங்க வேண்டியிருந்தது. மருந்துக்கடைக்காரர் தூங்கிவிழுந்துகொண்டு மிகவும் தாமதமாக மருந்துகளைக் கட்டிக்கொடுத்ததால் நான் ரயில்வே. ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தபோது ரயில் அப்போது தான் போய்க் கொண்டிருந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் எனக்காக வண்டியை ஒரு நிமிஷ நேரம் அதிகமாக நிறுத்தி வைத்திருந்தார். ஆனுல் நான் வந்து சேராததால், ரயிலிலிருந்து என் சாமான்களை ஜாக்கிரதையாகக் கீழே இறக்கிவைக்குமாறு அவர் சொல்லிவிட்டார்.

### பயோனீர் ஆசிரியருடன் பேட்டி.

கெல்னர் ஹோட்டலில் நான் ஒரு அறையில் தங்கியிருந்து அப்போதே வேலையை ஆரம்பித்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டேன். அலகபாத்தில் வெளியாகும் பயோனீர் பத்திரிகையைப்பற்றி நான் அதிகம் கேள்விப்பட்டிருக்கிறேன். அது இந்தியருடைய அபிலாஷைகளுக்கு ஒரு எதிரியாக இருந்ததென்று எனக்குத் தெரியும். மிஸ்டர் செஸ்னி (சின்னவர்) அப்போது ஆசிரியராக இருந்ததாக எனக்கு ஞாபகம். எல்லாக் கட்சிகளுடைய ஆதரவையும் நான் பெற விரும்பியதால், எனக்கு ரயில் தவறி விட்டதாயும், அடுத்த நாள் புறப்பட்டுப் போவதாயும், அதற்குள் சந்தித்துப் பேச விரும்புவதாயும் மிஸ்டர் செஸ்னிக்கு எழுதினேன். உடனே அவர் எனக்குப் பேட்டியளித்தார். அவர் நான் கூறியவற்றையெல்லாம் மிகப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டதால் எனக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. நான் எது எழுதினுலும் அதைப்பற்றித் தமது பத்திரிகையில் குறிப்பிடுவதாயும், ஆனுல் இந்தியர் கோரிக்கை எல்லாவற்றையும் ஆதரிப்பதாக உறுதிகூற முடியாதென்றும், குடியேற்றநாட்டு ஜனங்கள் கூறுவதையெல்லாம் கேட்டறிந்து அதற்கும் தக்க மதிப்புக்கொடுக்கவேண்டியிருக்குமென்றும அவர் தெரிவித்தார். விஷயத்தை அவர் ஆராய்ந்து தமது பத்திரிகையில் அதைப்பற்றி விவாதித்தால் போதுமென்றும், பூரண நியாயத்தைத் தவிர வேறு எதையும் நான் தேடவில்லையென்றும பதில் கூறினேன்.

அன்று பாக்கி நேரத்தில் நகரத்தைச் சுற்றிப்பார்த்ததோடு திருவேணி (மூன்று நதிகளின்சந்திப்பு)க்குச் சென்றும் தரிசித்தேன். இனிமேல் செய்யவேண்டிய வேலையைப்பற்றி எனக்குள்ளாக ஒரு ஏற்பாடும் செய்து கொணடேன்.

எதிர்பாராத விதமாகப் பயோனீர் பத்திரிகை ஆசிரியருடன் கிடைத்த இந்த பேட்டியிலிருந்து தான் வரிசையாகப் பல சம்பவங்கள் நடந்து, முடிவில் நேட்டாலில் என்னை ஜனக்கூட்டம் தாக்கித்துன்புறுத்துமாறு நேர்ந்தது.

நான் பம்பாயில் தங்காமல் நேராக ராஜ்கோட்டிற்குச் சென்று தென் ஆப்பிரிக்காவில் உள்ள நிலைமையைப் பற்றி ஒரு துண்டுப்பிரசுரம் எழுத ஆயுத்தம் செய்தேன். அதை எழுதிப் பிரசுரிக்க ஒருமாதம் பிடித்தது. அதன் அட்டைபச்சை நிறமாக இருந்ததால் அதற்குப் பச்சைப் பிரசுரமென்று பின்னர் பெயர் ஏற்பட்டுவிட்டது. தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் நிலைமையைப்பற்றி நான் அதில் மிகவும் அடக்கமாகவே எழுதியிருந்தேன். முன்னர் குறிப்பிட்ட இரண்டு பிரசுரங்களையுமவிட இதனுடைய நடையும் மிதமாகவே இருந்தது. ஏனெனில் தூரத்திலிருந்து ஒரு விஷயத்தைப்பற்றிக் கேள்விப்படும்போது உள்ளதைவிட அது பெரிதாகவே தோன்றுமென்பதை நான் அறிந்திருந்தேன். பதினுயிரம்அச்சடிக்கப்பட்டு இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலுமுள்ள எல்லாப் பத்திரிகைகளுக்கும் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டன. பயோனீர பத்திரிகைதான் அதைப்பற்றி முதலாவதாகத் தலையங்கம் எழுதியது. அந்த வியாசத்தின் சுருக்கம் ஒன்றை ராய்ட்டர் இங்கிலாந்திற்குத் தந்தி மூலம் அனுப்பினுர். அந்த சுருக்கத்திற்கு இன்னொரு சுருக்கம், ராய்ட்டரின் லண்டன் ஆபீஸிலிருந்து நேட்டாலுக்கு அனுப்பப்பட்டது. இந்தக்கடைசித் தந்தி அச்சடிக்கப்பட்ட பின் பார்த்தால் அதில் மூன்று வரிகளுக்குமேல் இல்லை. நேட்டாலில் இந்தியா நடத்தப்படும் விதத்தைப்பற்றி நான் கூறியவற்றைச் சுருக்கமாயும் ஆனுல் மிகைப்படுத்தியும் அதன் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனுடைய வாசகம் என்னுடைய தல்ல. நேட்டாலில் இது என்ன பலனை உண்டுபண்ணியதென்று பின்னர் பார்ப்போம். இதற்குள்ளாக எல்லா முக்கிய பத்திரிகைகளும் இந்த விஷயத்தைப்பற்றி விரிவாக அபிப்பிராயம் எழுதிவிட்டன.

### சிறுவர்களின் தொண்டு.

அந்தப் பிரசுரங்களைத்தபால் மூலம் அனுப்புமாறு தயார் செய்வது சுலபமாக இல்லாததோடு, அட்டை தயாரித்துச் சுற்றுவது முதலியவற்றிற்குச் சம்பளம் கொடுத்து ஆள் அமர்த்தினுல் அதிகச் செலவும் பிடித்திருக்கும். ஆனுல் நான் ஒரு சுலபமான வழி கண்டு பிடித்துவிட்டேன். என்னுடைய ஊரிலுள்ள சிறுவர்களையெல்லாம் கூப்பிட்டு, பள்ளிக்கூடம் இல்லாத ஒரு நாள் காலையில் வந்து எனக்காக இரண்டு மூன்று மணி நேரம் உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டேன். அவர்கள் விருப்பத்துடன் இதற்குச் சம்மதித்தனர். நான் அவர்களை ஆசீர்வாதம் செய்து, நான் சேர்த்து வைத்திருந்த பழய லேபிள்களை அவர்களுக்குப் பரிசாகக் கொடுப்பதாகக் கூறினேன். சிறு குழந்தைகளைத் தொண்டர்களாக உபயோகித்துக் கொள்ளுவதில் இதுதான் என்னுடைய முதலாவது அனுபவம். அம்மாதிரி தொண்டர்களாக உதவி செய்த இரண்டு சிறுவர்கள் இப்போது என் சகாக்களாக வேலை செய்கிருர்கள்.

### பிளேக்

இச்சமயம் பம்பாயில் பிளேக் தோன்றிவிட்டது. எங்குபார்த்தாலும் ஒரே பீதியாக விருந்தது. சுகாதார இலாகாவில் நான் ஏதாவது உபயோகமான வேலைசெய்யக் கூடுமென்று கருதியதால் சமஸ்தான அதிகாரிகளுக்கு என் விருப்பத்தை அறிவித்தேன. அவர்கள் அதை யேற்றுக்கொண்டு இவ்விஷயத்தைக் கவனிக்க நியமிக்கப்பட்ட கமிட்டியில் என்னை ஒரு மெம்பராகச் சேர்த்தனர். கக்கூஸ்கள் சுத்தமாக இருக்கவேண்டியதைப்பற்றி நான் பலமாக வற்புறுத்தினேன. ஒவ்வொரு தெருவிலும அவற்றைப் பார்வையிடுவதென்று கமிட்டி தீர்மானித்தது. எளிய ஜனங்கள் நாங்கள் அவர்களுடைய வீட்டு கக்கூஸ்களைப் பார்வையிடுவதை ஆக்ஷேபிக்காததோடு, நாங்கள் கூறிய அபிவிருத்தி யோசனைகளையும் நடத்திவைத்தனர் ஆனுல் மேல் வகுப்பினர் வீடுகளுக்கு நாங்கள் சென்றபோது சிலர் எங்களை உள்ளே அனுமதிக்கக்கூட மறுத்துவிட்டனர். ஆகையால் எங்கள் யோசனைகளை அவர்கள் நிறை வேற்றிவைப்பதைப் பற்றிப் பேசவே வேண்டியதில்லை. எங்கள் அனுபவத்தில் பணக்காரர்களுடைய வீட்டுக் கக்கூஸ்கள் தான் அதிக அசுத்தமாக விருந்தன. அவைகள்இருட்டாயும், துர்நாற்ற முடையனவையாயும், நரகத்தைப் போலவே இருந்தன. நாங்கள் கூறிய யோசனைகள் மிகவும் சுலபமானவையே. அதாவது மல ஜலவாதைக்குப் போவது கீழே விழுந்து ஊராமல் வாழிகளை ஸவக்க வேண்டுமென்றும், வெளிச்சுவறுகளுக்கும் கக்கூஸ்களுக்குமிடையில் உள்ள அடைப்பை இடித்துவிட்டு அதிகமான வெளிச்சமும் காற்றும் வருமாறு செய்யவேண்டுமென்றும், இப்படி செய்தால் தோட்டிகள் நன்ருகச் சுத்தம் செய்ய முடியுமென்றும் கூறினேம். இந்தக்கடைசி யோசனைக்கு மேல் வகுப்பினர் பல ஆக்ஷேபங்கள் கூறினுர்கள். பெரும் பான்மையோர் வீட்

(இதன்தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## இந்தியாவும், இந்தியனும்.

இருபத்தையாயிரம் மைல் சுற்றளவு கொண்டிருக்கும் இப்பூலோக உருண்டையில் வசிக்கும் குடிகளைத் தற்காலம் கருப்பு மனிதர், வெள்ளை மனிதர் என்றும், இரண்டு பெரும் பிரிவுகளாகப் பாகித்துப் பேசுகிறோம். அதில் வெள்ளை மனிதர் புஜபலபராக்கிரமத்தில மேலானவர்களாயும், கல்வி கேள்வி நாகரீகத்தில் பெரியோராகவும் மதிக்கப்படுகிறார்கள். "கழுதை ஜென்மம் எடுத்தாலும், வெள்ளைக் கழுதையாய்ப் பிறக்க வேண்டும்" மெனப் பழமொழியும் ஒன்று உண்டாகி, அங்கீகாரம் பெற்று வழங்குகிறது. பூமண்டலத்தின் சகல கண்டங்களிலும், தீவுகளிலும் உள்ள நீர்வளம், நிலவளம், காற்றவளம் பொருந்திய பூமியாவும், "பாக்கியவான் வருகிறான்; இடங்கொடு" என்று அவருக்கே உரியதாய் இருக்கின்றன. வெகு தூரம் போகாமல் நமது ஜென்ம பூமியாகிய பாத கண்டத்தையே கவனிப்போம்.

ஐரோப்பியாது அலங்கார மாளிகைகளும், கடைகளும், கடலோரங்களிலும், ஆற்றோரங்களிலும், வனமான நிலங்களிலும், மலைகளின் சொகுசான மேடைகளிலும் இருக்க இந்தியரின் மனைகள் ஏதோ நிலம் என்று பெயரிட்ட எந்த இடத்திலும் இருக்கக் காணலாம். தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, நியூ ஸீலண்டு, ஐக்கிய மாகாணம் முதலிய தேசங்களில் எந்தக் கருப்பு மனிதனும் போய் ஒரு குடிசைக்கு இடம் கூடச் சம்பாதிக்க முடியாது.

இந்தியாவின் கடைகளைப் பார்த்தால் இன்றும் ஒரு காரியம் கவனிக்கலாம். அங்கே இத்தேசத்துக் குடிகளின் உயிர் வாழ்க்கைக்குரிய சகல விசுச் சாமான்களும், உணவுப் பதார்த்தங்களுங்கூட நிரப்பிக்கிடக்கின்றன. தோட்டி முதல் தொண்டைமான் வரையில் விரும்பக் கூடிய வஸ்திரங்களும், ஊசி, மை, பேனா, காகிதம், விளக்கு முதல் உத்திரம், தூண், கம்பி, தகடு, கட்டில், மெத்தை, தலையணை, சமைக்கச் சட்டி, குடிக்கச் சட்டி, உணவுக்கான மாமிசம், வெண்ணெய், சிற்றுண்டிகள், சோப்பு வகைகள், குழந்தைகள் விளையாடும் சாமான்கள், வாகனங்களாகிய சகல விதப் பொருட்களும் வெள்ளை மனிதர் செய்து நமது கடைகளை நிரப்பிப் பரப்பிக்கிடக்கின்றன. ஆகவே இந்தியாவின் விளை நிலங்கள், வியாபாரம், கைத்தொழிலாகிய இம்மூன்றைக்கும் இந்தியாவின் மகன் அந்நியனாய் நிற்கின்றான். அந்தோ! நெல்லுக்குத்தி ஜீவிக்கும் பெண்களின் கூலி வேலை இப்போது இல்லை; மாவரைக்கும் வேலை யில்லை; கன்னான், கொல்லன், வண்டிக்காரன் வேலையெல்லாம் ஒழிந்தது. இவ்வேலைகளும், இன்னும் எண்ணிறந்த வேலைகளும் முடிக்க வெள்ளை மனிதன் சமைத்த யந்திரங்கள் காத்திருக்கின்றன.

கல்வி கற்றவர் எனப் பெயர் எடுத்த இந்தியர் கதி என்ன? அதை வெளியே சொல்ல வேண்டாம். அவர்களுக்குத் தாய் பாஷை தெரியாது. தமிழ் சங்கத்தில் எழுந்து நின்று ஆங்கிலத்தில் பேசுவார்கள். எந்த வேலையிலும் ஒருவரிடம் கைகட்டி நின்று சம்பளம் பெற்று ஜீவிக்கத் தெரிந்தவர் பெரும்பாலர். அது அவர்களது பிசகன்று, ஏனெனில் அவர்களுக்குரிய நிலம் பயிரிடத் தெரியாது; அவர்களால் முடியாது; வியாபாரம் பண்ண அவர்களுக்குத் தெரியாது; பிஸ்கத், மிட்டாய் தினுசுகள், வர்த்தி சோப்பு ஆகிய பொருட்களில் எதுவும் செய்ய அறியார்கள். பத்துப் பேர் செல்வர் கூடி ஒரு தொழில் ஏற்படுத்த வேண்டுமென விரும்பினாலும், அதைக் கொண்டு செல்ல வேண்டிய விதமான கல்வியறிவு அவர்களுக்கு இல்லை. ஆகவே, பி. ஏ. பட்டம் பெற்ற பெரும் புலிகளில் பலர் கூடத் தற்காலம் யாதொரு வேலையும் இல்லை யென வாடித் திரிகிறார்கள். இவர்களுக்கு இப்படி கவைக்கு உதவாத கல்வி புகட்டிய குற்றம் எவருடையது? 100-க்கு 88 வீதம் குடிகள் எழுத்தறிவின்றித் தொழில்கள் செய்து தேசத்தின் பிழைப்பைக் கெடுப்பது யார் குற்றம்?

பாரத மாதாவை நேசிக்கும் பெருமக்காள்! இதை நீங்கள் கவனிக்க மாட்டீர்களா? முனிசிபல் சபையிலும், சட்ட நிரூபண சபையிலும் இதை எடுத்துப் பேசுவோர் இல்லையா? பாடசாலைகளில் தொழில், கல்வி ஏற்படுத்தும் வீரசிகாமணிகள் நாடார் ஜாதியில் உண்டா? இரவுப் பாடசாலைகள், பெண் பாடசாலைகள் ஆதரிக்கும் தரும புத்திரர் உண்டா?

தற்காலம் இந்தியாவின் மக்கள் திரள் கூட்டங்களாய் சிலோன், பினங், சிங்கப்பூர் முதலிய பல அயல் நாடுகளிலும், இந்தியாவின் சுரங்கங்கள், மலைகள், கப்பல் துறைகள், யந்திரசாலைகள், செல்வர் மனைகள் முதலிய இடங்களில் கூலி வேலை செய்து வயிறு வளர்த்து கொடிய நிர்ப்பந்த ஜீவியம் செய்கிறார்கள். நமது பயிர் நிலங்கள் பாழ் நிலங்களாய் கிடக்கின்றன. கோலார், நீலகிரி மலைகள், ஏர்காடு (சேலம்) மலைகளில் இந்திய கூலிகள் வசிக்கும் இடம் ஒரு பசுக் கட்டத்தகுந்ததல்ல; காரணம் பிறர் செய்யும் கொடுமையல்ல; இவர்களது கல்வி யறிவில்லாத நிலைமைதான். எந்த உத்தரவாதமான வேலையும் இவர்களிடம் கொடுக்கலாகாது. சத்தியம் பேசவும், கபடமின்றி கடவுளுக்குப் பயந்து நல் மனதுடன் உழைக்கவும், இவர் அப்பியாசப்பட்டவரன்று. இவர்களுக்கு இரங்குவாரும், நேசிப்பாரும் உண்டோ? வாசிப்புக் கல்வியும், தொழில் கல்வியும் கொடுத்து பாரத மாதாவின் மைந்தரை ஆற்றுங்கள்; தேற்றுங்கள்.

இந்திய நேசி.

## பலதிரட்டு.

அலிப்பூர் சிறையில் போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட் மிஸ்டர் பி. என். சாட்டர்ஜியைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட வங்காள வாலிபர்கள் 10 பேர் செய்துகொண்ட மனு இன்று ஹைகோர்ட்டு முன் விசாரணைக்கு வந்தது. இருவர் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். மற்று மூவர் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டனர். கைதிகளின் கோரிக்கைப் பிரகாரம் முன்னமே தூக்கிலிடப்பட்டவர்கள் போக மற்றவர்கள் ஸ்பெஷல் ஜட்ஜுகள் முன்னிலையில் விசாரிக்கப்படுவர்.

## ஏகாதிபத்ய மகாநாட்டின் முடிவு.

பிரிட்டனைப்போல் அந்தஸ்து குடியேற்ற நாடுகளுக்கும் கொடுக்க வேண்டுமென ஏகாதிபத்ய மகாநாட்டில் முடிவு செய்யப்பட்ட விஷயமாக "ரங்கூன் கெஜட்" பத்திரிகை கூறுகிறதாவது:— இந்த மாறுதல் ஏகாதிபத்யத்தை வலுப்படுத்தியது. இனி பிரிவுபட்ட பொறுப்பு இருக்காது. தாய்நாட்டுடன் இனி மற்றைய நாடுகளும் அதிகமாக விஸ்வாசத்துடன் கலந்து வாழ சந்தர்ப்பமேற்படும். சர்வ சுதந்திரம் கொடுக்கப்பட்டுவிட்டால் தற்போது கூடிய ஏகாதிபத்ய மகாநாடு சிறந்ததென்ற மதிப்பை அடைந்து விடக்கூடும்.

## சௌக்கியமடைந்தார்.

வடக்கன்குளம் நாடார் க்ஷத்திரிய ஐக்ய சங்கம் மானேஜரும், உண்டியல், ஜவுளி, பலசரக்குக் கடை முதலாளியும், தேசாபிமானம், மதாபிமானம், குலாபிமானம் நிறைந்தவரும், பொது ஜன ஊழியத்தில் மிக்க பிரீதியுடையவரும், எல்லோருக்கும் நல்லாரென ஒப்பத்தகுந்தவருமான ஸ்ரீமான் உப. மா. ஞானப்பிரகாச நாடார் அவர்கள் கொடிய வியாதிவாய்ப்பட்டு எல்லாம் வல்ல இறைவனருளாலும், ஸ்ரீமான் ஆனந்தபால் நாடார் வைத்தியரவர்களின் அரும் பிரயாசையினாலும் பூரண சௌக்கியமடைந்தார் என்று ஸ்ரீமான் ஜே. எம். ஜேசுமரிய நாடார் எழுதுகிறார்.

## மனைவியைக் கொன்றவன் வழக்கு.

கொண்டகோரு சோம்புரு என்பனுக்கு கலியாணம் ஆகி 4 வருஷங்களுக்கு மேலாகிறது. அவ்வளவு காலமாகவும் அவனுடைய காம இச்சைக்கு மனைவி இடங் கொடுப்பதில்லை. இவ்விஷயமாக இருவருக்கும் அடிக்கடி மனஸ்தாபம் சண்டை ஏற்படலாயிற்று. சென்ற ஜூன் மாதம் ஒருநாள் எதிரிக்கு தம் மனைவியின் பிடிவாதத்தினால் கோபம் அதிகரித்துவிட்டது. அன்று எதிரி தன் மனைவியை காட்டிற் கழைத்துக் கொண்டுபோய் அவளைக் கெஞ்சி பல வழியிலும் இணங்குமாறு கேட்டும் அவள் சம்மதிக்கவில்லையாம். அதனால் கோபமூண்டு அவளைக் கையிலிருந்த கோடாலியினால் வெட்டிக்கொன்று குழிதோண்டி சவத்தையும் புதைத்துவிட்டான். சில நாட்கள் கழித்து எதிரி தன் கழுத்தில் சுருக்கிட்டு இறந்து போக முயற்சிக்கையில் அவன் சகோதரர்கள் அகஸ்துமாத்தாக அங்கு வந்து காப்பாற்றினார்கள். பிறகு எதிரி நடந்தது யாவற்றையும் ஒப்புக்கொள்ளவே செஷன்ஸ் ஜட்ஜியினால் தூக்கிலிடுமாறு தண்டிக்கப்பட்டான். அதன் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்பட்டது. எதிரிக்காக ஆஜரான ஸ்ரீமான் எ. வி. நாராயணசாமி அய்யர் தம்கட்சிக்காரர் 4 வருஷமாகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் பெண்டாட்டியிடமிருந்து உதையைத் தவிர வேறொரு சுகத்தையும் கண்டதில்லையென்றும் அந்நிலைமையை அறிந்து கனம் ஜட்ஜுகள் அவன் மீது பரிதாபம்காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். முடிவில் கனம் ஜட்ஜுகள் கொலைத்தண்டனையை மாற்றி ஆயுள்பரியந்தம் தீவாந்திர சிட்சை விதிக்குமாறு உத்தரவிட்டார்.

## இந்தியர்களுக்கு தலைவரி

கென்யாவிலுள்ள ஆசியாக் காரர்களுக்கு 1 பவுன் வீதம் தலைவரி விதிக்கப்பட்டிருக்கிறது. அது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கல்விவரி. ஐரோப்பியர்களுக்கு இந்த தலைவரியில்லை. இரண்டு ஆட்களுக்குமேல் வைத்துக் கொண்டிருந்தால் மட்டும் ஒரு ஆளுக்குவரி விதிக்கப்படும். டிசம்பர் மாதத்தில் இது சம்பந்தமான மசோதா கொண்டு வரப்படும். இந்தியர்கள் மிக்க ஆத்திரத்துடனிருக்கின்றனர்.

## ஆபாசமான படங்களை வைத்திருந்ததாக.

சென்னை அரண்மனைக்காரதெருவில் வசிக்கும் விஸ்வநாத முதலியார் என்பவர் ஆபாசமான படங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் இரண்டாவது பிரிசிடென்சி மாஜிஸ்திரேட் எதிரிக்கு ரூ 200 அபராதம் விதித்தார்.

## விருதுநகர்.

விருதுநகர் முனிசிபல் சபையின் கூட்டமொன்று 18-11-26 மாலை ஜனாப் இப்ருகிம் ராவுத்தர் தலைமையின் கீழ் நடந்தது. ஸ்ரீமான்கள் கா. பழனிசாமிநாடார், மு. அ. ப. ராமய்ய நாடார், ஆகியவர்கள் ராஜவிசுவாசப் பிரமாணம்செய்தார்கள். மதுரைஎலக்டரிக்கம்பெனியாரால் விருதுநகருக்கு 30 காண்டில்பவர் லயிட் 450க்கும் 250காண்டில் பவர்லயிட் 26-க்கும் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 12000 ஒப்புக்கொண்டு 1928-ல் ஜனவரி மாதத்திலே லயிட் கட்டாயமாய் போடவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. மகமதியர் ஸ்கூல் கட்டுவதற்கு ராமனாதபுரம் ஜில்லா கலெக்டரை அஸ்திவாரக்கல் நாட்டுவதற்குஅழைப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ஓர் கொலை.

எட்டையபுரம் போலீஸ் ஸ்டேஷன் சரகஎல்லைக்குள் நவம்பர் 14-ந்தேதி ஒரு மனிதனின் தலையற்றமுண்டம் காணப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. போலீஸாரால் பிரேத விசாரணை நடத்தப்பட்டதாகவும் கொலை யுண்டவரின்னாரென்று தெரியவில்லை யென்றும் போலீஸார் துப்பறிந்து வருவதாகவும் தெரிகிறது.

## குகையில் குழந்தைகள்.

மிதுனபுரியில் ஓநாய்களின் குகையில் இரண்டு குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டு ஐந்து வருஷங்களாகின்றன. அப்போது ஒருகுழந்தைக்கு 8 வயதும் இன்னொரு குழந்தைக்கு இரண்டு வயதுமாக விருந்தது. இளையகுழந்தை சில தினங்களுக்குப் பிறகு மரித்துவிட்டது. மற்றொரு குழந்தை மிதுனபுரி அநாதை ஆஸ்ரமத்தில் ரெவரண்டு ஜால்சிங்கால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பிஷப்வால்ஷ்ம், பிஷப் ஜால்சிங்கும் கிராமங்களைச் சுற்றிப்பார்த்து வரும்போது பிஷப் ஜால்சிங்கு ஜனங்களால் உபயோகப் படுத்தப்படாத ஒரு வழியிருப்பதாகக் குறிப்பிட்டார். அவ்வழி எங்கேயெனக் கேட்டு தெரிந்துகொண்டு பாதிரியார் 16 பேர்களுடன் ஒரு பெரிய பொந்தினருகேவந்தனர். வந்தவர்கள் அந்த பொந்தைத் தோண்டிப்பார்க்க ஆரம்பித்தனர். அங்கிருந்து இரண்டு ஓநாய்கள் பாய்ந்து வெளிவந்து ஓடிவிட்டன. மற்றொரு பெண் ஓநாய் வாயிலில் நின்று கொண்டு உறுமிக்கொண்டிருந்தது. அங்கிருந்து அசையுவேயில்லை. அதனால் அதைச் சுடும்படியாயிற்று. இன்னும் தோண்டிப்பார்க்க ஒரு குகை காணப்பட்டது. அதில் இரண்டு குழந்தைகளும் இரண்டு ஓநாய் குட்டிகளுமிருந்தன. அதில் ஒரு குழந்தைக்கு 8 வயதும் மற்றொரு குழந்தைக்கு இரண்டு வயதுமாகவிருந்தன. அவைகள்யாவும் உடனே பாய்ந்து வெகு வேகமாக ஓட ஆரம்பித்தன. குழந்தைகள் கைகளை ஊன்றிக்கொண்டு மிருகங்களைப் போல் ஓடின. ஓடிப்போய் ஒரு புதரில் ஒழிந்து கொண்டனவாயினும் பின்னால் பிடிக்கப்பட்டன. அக்குழந்தைகளின் விரல் நகங்கள் வளைந்து வளர்ந்திருந்தன. இப்பக்கங்களில் பெண்குழந்தையாகப்பிறந்தால் இப்படி அஜாக்கிரதையாக வெளியில் கிடத்தியிருப்பது வழக்கமாம். ஆகவே குழந்தையை ஓநாய் தூக்கிக்கொண்டுவந்து குகையில் வைத்துக் கொண்டிருக்கலாம். இன்னும் சில வருஷங்களுக்குப் பிறகு இப்படியே இன்னொரு குழந்தையையும் கொண்டுவந்து தன் குட்டிகளோடு வளர்த்திருக்கலாம். இரண்டு சிறுமிகளும் வங்காளிகளெனத் தெரிகிறது. அநேகமாக அவர்கள் சகோதரிகளாக விருக்கலாம். மிஸ்டர் சிங் அக்குழந்தைகளை மிதுனபுரிக்கு எடுத்துச் சென்றார். சிறிய குழந்தைக்குச் சீதபேதிகண்டு சில தினங்களில் இறந்து போயிற்று. இதைக்கண்ட பெரிய குழந்தை சற்று கண்ணீர் வடித்தது. அதுதான் துக்கக்குறி. இப்போது அவளது வயதுக்குத் தக்கபடி உருவம் வாய்த்திருக்கிறாள். அவள்மிருகள்உட்காருவதுபோல் உட்காருகிறாள். ஒன்றுஞ் செய்யாமல் அப்படியே சும்மா உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கு இப்போது தான் 30 வார்த்தைகள் கற்பிக்கப் பட்டிருக்கின்றன. வந்தனம் சொல்லுகையில் "நமஸ்கார்" என்று குழந்தை சொல்லுவது அழகாக விருக்கிறது. குழந்தை இனிமையாக நகைக்கிறது. இப்பொழுது குழந்தை துணிகட்ட ஆரம்பித்திருக்கிறது. முதலில் கையால் தொடாமல் வாயால் கவ்வி சாப்பிட்டு வந்தாள். இப்போது கையால் எடுத்து சாப்பிடக் கற்றுக்கொண்டாள். அவள் விளையாடப் போவதில்லை. மற்ற குழந்தைகளோடும் கலப்பதில்லை. மற்ற குழந்தைகளைப் போல் அவள் பயப்படுவதேயில்லை. வெளிச்சத்தில் இருப்பதைவிட அவள் இருட்டில் இருக்கவே விரும்புகிறாள். இவள் மாமிசம் சாப்பிட அதிலும் பச்சையாகச் சாப்பிட அதிகப்பிரியப்படுகிறாள். கேட்கும் சக்தியும் பார்க்கும் சக்தியும் இவளுக்கு அதிகமாக விருக்கிறது. அவளுக்கு ஞாபகசக்தி மிக்க குறைவாகவிருக்கிறது. அவளுக்கு ஞான ஸ்நானம் செய்விக்கப்பட்டு கலாமா என்ற நாமகரணமும் செய்யப்பட்டது. இரண்டு குழந்தைகளும் உயிரோடிருந்தபோது நாய்க்குட்டிகளைப்போய் ஒன்றோடொன்று இணைந்து தலை கீழாகத் தூங்கிவந்தன. இப்பொழுது கலாமா என்ற இந்தப் பெண் ஊளையிடுவதில்லை. தான் கற்றுக்கொண்ட வார்த்தைகளை மட்டும் உச்சரிக்கின்றாள். அவள் சிரிப்பதில்லை, அழுவதுமில்லை. மிருகங்களிடம் அவள் பெரிதும் விரும்புகிறாள். சாஸ்திர சங்கங்கள் இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்கின்றன.

நாடார்குலமித்திரன்

அக்ஷய ௵ கார்த்திகை மீ ௰௪ ௳

## ஏன் ஜெயிக்கவில்லை?

நவம்பர் எட்டில் நிகழ்ந்த சென்னை சட்டசபைத் தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சி ஜெயித்து விட்டது. ஜஸ்டிஸ் கட்சிக்குச் சாவு நேர்ந்தது. வகுப்புத் துவேஷம் அடியோடு தொலைந்தது என்று ஒரு சாரார் எங்கும் பறைசாற்றி வருகிறார்கள். கொம்பிலேயே தின்னும் குணத்தால் கூறும் கூற்றை எல்லோரும் நம்புதற்கில்லை. அக்கூற்று சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டிலும் ஒருவாறு ஒப்புமேயன்றி மற்றெவ்விடங்களுக்கும் ஒவ்வாது. சுயராஜ்யக் கட்சிக்குப் பல இடங்களிற் றோல்வி ஏற்பட்டிருக்கிறது. பூரண ஜெயம் அதனம்சமென்றால் சுயேச்சைக் கட்சி பலப்படுவானேன்? முஸ்லீம் கட்சி யொன்றுண்டாகப் போவானேன்? முன்னைப் பார்க்கிலும் கட்சிகள் அதிகமா? குறைவா? வகுப்புத் துவேஷங்கள் குறைந்து விட்டதென்று எப்படிச் சொல்ல முடியும்?

திருநெல்வேலி ஜில்லாவில் சுயராஜ்ய ஹோதாவில் நின்ற ஸ்ரீமான்கள் சா. து. கணபதி பந்துலு, துரைச்சாமி நாடார் இருவரும் ஏன் ஜெயிக்கவில்லை யென்பதைக் கவனிப்போம். அஜ்ஜில்லாவில் மொத்தம் சுமார் 45000 ஓட்டர்களில் அபேட்சகர்களாக நின்ற ஐவருக்கும் சுமார் 30000 ஓட்டர்கள் தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன் முழுவிஷயங்களும் பிறதோரிடத்திற் பிரசுரம் செய்திருக்கிறோம். ஐயர், ஐயங்கார், இதர காங்கிரஸ் அபிமானிகளாகிய மொத்த ஓட்டர்கள் சுமார் 7000 இருக்க வேண்டும். நாடார்களின் ஓட்டுகள் 18000 இருக்க வேண்டியது. ஆனால் சாபிதாத் தயார் செய்த கணக்குப் பிள்ளைகள் கண்ணிற்கு சுமார் 7000 தான் தென்பட்டிருக்கிறது. அப்படி யானாலும் இருவருக்கும் சுமார் 14000 பேர்களிருக்க ஏன் ஜெயிக்கவில்லை? சுயராஜ்யக் கட்சியார் வகுப்புத் துவேஷம் தொலைந்ததென்று சொன்னது திருநெல்வேலியில் தொலையாமலிருந்து வந்ததும், அவ நம்பிக்கையும் ஒரு காரணமாகும். ஸ்ரீமான் ரெட்டியார் வெகு நாட்களாக பொது ஜன சேவையிலும், ராஜீய சேவையிலும் ஈடுபட்டு வெகு ஜனப் பிரியராயிருந்து, தாம் வெற்றி பெறுவதற்கு வேண்டிய அரண்கள் கட்டப்பட்டிருந்தவைமற்றொரு காரணமாகும். அவ்வரண்களை யெல்லாம் தகர்த்தெறியும் பலங்கள் மேற் கண்ட இருவருக்கும் எவ்வளவோ இருந்தும் ஐயர்கள் ஐயத்தால் ஐயர் அபஜெயமடைந்தார். அவரோடு சேர்ந்த நாடாரும் தோல்வியுற்றார். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுமென்பது போல் ரெட்டியாரோடு சேர்ந்த முதலியாரும் ஜெயம் பெற்றார்.

ஐயருக்கும், நாடாருக்கும் சேர்ந்து 887 ஓட்டுகள் தான் கிடைத்திருக்கின்றன. ஓட் செய்தவர்கள் உண்மையில் காங்கிரஸ் வாதிகளாயிருக்கலாம். மகாத்மா காந்தி மூலக் கொள்கையை ஆதரிப்பவர்களாயிருக்கலாம். ஐயருக்குத் தனி ஓட்டுகள் 2069 ம், நாடாருக்குத் தனி ஓட்டுகள் 2719ம் கிடைத்திருக்கின்றன. உண்மையான கூட்டுறவிருந்தால் தனிப்பட்ட ஓட்டு விழுமா? அபேட்சகர்களாகிய ஐயருக்கும், நாடாருக்கும் பரஸ்பர அன்பும், ஒற்றுமையுமிருந்திருந்தாலும் ஐயர்பால் பிரசாரம் செய்தவர்கள் ஐயத்தால் விஷமஞ் செய்ய வாரம்பித்தார்கள். அதாவது:— ஐயர்களை யெல்லாம் ஐயருக்குத் தனி ஓட் செய்யும்படி மந்திரம் போட்டார்கள். நாடார்கள் அதிகமாயுள்ள இடங்களுக்குச் செல்லும் பிரசார கார்களில் நாடாருக்கும், ஐயருக்கும் ஓட் செய்யுங்கள் என்று விளம்பரப் போர்டுகள் தொங்கவிடப்பட்டும்நாடார்கள் அதிகமில்லாத விடங்களுக்கு அக்கார்கள் செல்லும்போது நாடார் பெயருள்ள போர்டை மாற்றி விடுவதுமான விஷமத்தைச் செய்து வந்தார்கள். இதைக் கண்ட நாடார்கள் எப்படிச் சகித்திருக்க முடியும்? ஐயரை நாடாரனுகியது கட்சி யபிமானத்தாலென்று தோன்றிய ஒரு சில நாடார்களைத் தவிர மற்ற நாடார்களெல்லாம் நாடாருக்கே தனி ஓட் செய்திருக்க வேண்டும். இவ்வாறு இருவருக்கும் பிளவான வேலைகள் நடக்கவும், ஸர். சிவஞானம் திருநெல்வேலி ராஜ்யம் பிள்ளைமாருக்கே சொந்தமென்று பிரசாரத்தைப் பலமாக நடத்தவும், "ஆடும் ஆடும் முட்டிக் கொள்ள நரிக்கு வேல விருந்தகப் பட்டது" போல் 470 தனி ஓட்டுகளுக்கு மேல் பெறாத ரெட்டியாரும், 165 தனி ஓட்டுகள் பெறாத முதலியாரும் நல்ல ஜெயமடைந்தார்கள். ஐயரும், நாடாரும், பிள்ளையும் தோல்வியுற்றும், ரெட்டியார், முதலியார் வெற்றியால் மூன்று சமூகங்களுக்கும், சமூகத் தலைவர்களுக்கும் நல்ல படிப்பினை யுண்டாகியிருக்குமென்று நம்புகிறோம்.

தவிர நாடார்களிலே சிலர் நாடாருக்கு விரோதமாக நடந்து கொண்டார்களென்று ஒரு குபார் சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமாயிருந்தாலும், எங்கும் இப்படி வேலைகளில் அப்படி யெல்லாம் நடப்பது சகஜமேயாம். கழுகுகளுக்கு எப்போதும்செத்த பிணங்கள் மீது திருஷ்டியிருப்பதுபோல் பணத்தின் மீதே சதா கண் வைத்து அதற்காக எதையும் மானமின்றிச் செய்யும் பேர்வழிகள் எப்போதுமிருக்கத் தான் செய்வார்கள். அவர்கள் பெயரும் ராவணன் பெயர் துலங்குவதுபோல் கோடரிக் காம்புகள் என்று எப்போதும் விளங்கிக் கொண்டு தானிருக்கக் கூடும். அவர்களை எப்போதும் எவருமே பொருட்படுத்த வேண்டியதில்லை. அவர்கள் சாவுமட்டும்தங்கள் திருவிளையாடல்களை நடத்தட்டும். ஆண்டவன் சன்னதியில் அதற்குரிய தண்டனையை அடையட்டும். நாமறிந்த வரையும் நாடார் குலத்தவர்களும், குல ஓட்டர்களும், குலத்தலைவர்களும், குலாபிமானிகளும் வெகு ஊக்கமாய், உற்சாகமாய், உறுதியாய், உள்ளன்பாய் வேலை செய்து வந்திருக்கிறார்கள். அஜ்ஜில்லாவில் பிரபல செல்வாக்குடையவரும், மிகுந்த குலாபிமானியுமான ஆறுமுகநேரி ஸ்ரீமான் எஸ். பொன்னையா நாடாரவர்களுக்கு முதலாவது தேர்தல் நடந்தபோது செய்த முயற்சிகளைப் பார்க்கிலும் இத்தேர்தலில் அதிகமான சர்வ பிரயத்தனங்களும் நாடார்கள் நடத்திவந்திருக்கிறார்களென்பதற்கு சுமார் 500 நாடார் ஓட்டுகள் இம்முறை அதிகம் பதிவு செய்திருப்பதே போதிய சான்றாம்.

நாடார் தோல்வியினால் நாடார் சமூகத்திற்குள் ஒருவாறு விசனமிருக்கலாம். அது வேண்டியதில்லை. வெல்வதும், தோற்பதும் விதிவசமே. நமது ராஜதானியெல்லாம் அபிவிருத்தி செய்து கொண்டிருந்த ஸர். சிவஞானமே தோல்வியடைந்திருக்க, நாடார்கள் சற்றும் தளர்வடைய வேண்டியதில்லை ஆனால்இனிச் செய்ய வேண்டியவேலையைமறந்துவாளாவிருத்தல் கூடாது. அடுத்த மூன்று வருடத்தில் வரப்போகும் தேர்தல் போருக்கு இப்பொழுதே அரண்களைப் பலப்படுத்த வேண்டும். கிறிஸ்தவ சமூகத்துக்கும், நாடார் சமூகத்துக்கும் நேத்திரம்போன்ற ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடார் அவர்கள் வெற்றி பெற்றிருப்பது பற்றி நாடார்கள் ஒரு சிறு தோல்வியைப் பொருட்படுத்தமாட்டார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீமான் அரி. அ. ச. துரைச்சாமி நாடாரவர்கள் சிறிது பணம் செலவானதைப்பற்றியாவது, தம் தோல்வியைப்பற்றியாவது சிறிதும் மனச் சோர்வடைபவரல்ல. மிகுந்த வைராக்கிய புருஷரென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. தேர்தலில் என்னவானாலும் தம் கட்சியை விட்டு மாறுவதில்லை என்று உறுதியோடு இருந்த உத்தமராவார். கடவுள் இன்னும் விசேஷ சக்தியைக் கொடுத்தருள் புரிவாராக.

---

## குறிப்புகள்.

### நிரவில்லை

வட இந்தியாவில் தேர்தல் முழக்கம் இன்னும் நிரவில்லை. ஜெயாப ஜெயத்தைப்பற்றி பத்திரிகைகள் பகர்வதை ஜனங்கள் நம்ப முடியாமல் சில பத்திரிகைகள் விஷயங்களை மிகைப்படுத்தியும் திரித்தும் கூறுகின்றன. எல்லாம் முடிந்தபின் தான் உண்மை அறியக்கூடும்.

### நாலாவது கட்சி

சென்னை சட்டசபைக்குள் தற்போது மூன்று கட்சிகளிருப்பது யாவரும் அறிந்தவிஷயம். இப்பொழுது முஸ்லீம்களாக ஒரு தனிச்சபை ஏற்படுத்த முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். இதுவும் கனம் பணக்கால் சூட்சியென்று ஒரு சோதிடர் கூறுகிறார்.

### உலக தாதா விஜயம்.

உலகதாதாவாகிய மகாத்மாகாந்தி டிசம்பர் 9௳ வார்தாவுக்குப் புறப்படுவார். அங்கிருந்து ஒரு காரில் அஸ்ஸாமுக்குப் போகலாம். காங்கிரஸுக்குப் பின் ராஜீய விஷயத்தில் அதிகமாக ஈடுபடுவதா இல்லையாவென்பதை இன்னும் அவர் முடிவு செய்யவில்லை யென்று தெரிகிறது.

### வருகை.

பிராமணரல்லாத பெருந்தகையார், ஆஸ்டிரேலியாவில்கூடிய காமன்

## விருதுநகரில் ஒருவருக்கு இருஜெயம்.

விருதுநகர் முனிசிபல்10-வது வார்டு எலெக்ஷன் 15—11—26ல் நடந்ததில் முன் அபேக்ஷகராய் நின்ற ஸ்ரீமான் கா. பழனிச்சாமிநாடார் அவர்களும் ஸ்ரீமான் சேர்த்தி கருப்பையாநாடார் அவர்களும் அபேக்ஷகராக நின்று எலெக்ஷன் நடந்ததில்100 அதிகப்படியான ஓட்டுகளால் ஸ்ரீமான் கா. பழனிச்சாமிநாடார் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு முனிசிபல் கவுன்சிலரானார். இன்னும் 23—11—26-ல் மதுரை கலெக்டர் ஆபீஸில் நடந்த இராமநாதபுரம்ஜில்லா கல்விச்சபை எலெக்ஷனிலும்ஒரு அபேக்ஷகராகநின்றுவிருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் முனிசிபல் கவுன்சிலர்களால் 35 ஓட்டுகள் பெற்று வெற்றியடைந்த ரோஜாஹாரமணியப் பெற்று விருதுநகரில் மாலை 5½ மணி மெயிலில் வந்திறங்கினார். பின் இவ்வூர் கவுன்சிலர்களும் நாட்டாண்மை ஸ்ரீமான் கா. க. ச. கருப்பையாநாடார் அவர்களும் அவர்களுடைய சகாக்களும் கல்வியில் சிறந்தசரும சிந்தனையுள்ள சிவகாசி, ஸ்ரீமான்களான பா. செ. ராமசாமிநாடார், ப. கொ. ச. அ. ஆறுமுகச்சாமிநாடார், நா. க. சின்னமணிநாடார், க. அ. மா. காளியப்பநாடார் ஆகியவர்களும் மற்றும் பெரியார்களும் விருதுநகர், ஸ்ரீமான் ப. மு. சு. அய்யம்பெருமாள் நாடார் அவர்கள் பிட்டங்கி மேல் மாடியில் சந்தோஷகரமாய்க் கூடி சிற்றுண்டிகளும், தாம்பூலம், சந்தனம் வழங்கப்பட்டு மேலே குறிப்பிட்ட சிவகாசிகனவான்களுக்கும் மற்றும் பெரியார்களுக்கும் ரோஜாஹாரம் அணியப்பெற்று, இரவு 8-மணிக்கு ஷெயார்கள் அனைவரும் மோட்டார் வாகனத்தமர்ந்து ஸ்ரீமான் கா. ப. அவர்களின் பங்களாவிற்கு வந்து சேர்ந்து பங்களாவின் அமைப்பையும் நந்தவனத்தின் சிறப்பையும் வியந்து ஸ்ரீமான் கா. ப. அவர்களின் படிப்பின் திறமையையும் விடாமுயற்சியையும் சலியாத உழைப்பையும் பகிரதப் பிரயத்தனத்தையும் எடுத்த காரியத்தை முடிக்கும் திறமையையும் வியந்து பேசிமுடித்த இரவு 9 மணிக்கு போஜனமுண்டு சந்தன தாம்பூலம் வழங்கி சந்தோஷகரமான சம்பாஷணைகளுடன் சிவகாசிகனவான்கள் மோட்டார்வாகனமேறி இரவு 10-மணிக்கு சிவகாசிக்குப் புறப்பட்டுச் சென்றனர் என விருதுநகர் ஜனுபியானி எழுதுகிறார்.

---

பத்யபார்லிமெண்டு அங்கத்தினர் மகாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்று வீரமுழக்கம் செய்த வீரர் ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ்செட்டியாரவர்கள் டிசம்பர் முதல் தேதியன்று கொழும்புக்கு வந்து சேருவார். நமது தாய் நாட்டில் நுழைவதை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

### காரியதரிசியானார்.

சென்னை கோக்லே மண்டபத்தில் 26௳ நடைபெற்ற சுயேச்சை வாதிகள் கூட்டத்தில் நமது ஸ்ரீமான் டானியல் தாமஸ்நாடாரவர்களை அக்கட்சியின் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மந்திரிசபை அமைப்பிலும் முக்கிய அம்சத்தைப் பெறுவாரென்று நம்புகிறோம்.

### யார்கழுத்தில் விழுகிறதோ!

கோவிலன் நாடகத்தில் மாதவி மாலை ஒவ்வொருவரும் தன் கழுத்தில் விழாதாவென்று தலையை நீட்டிக் கொண்டிருந்ததுபோல், தேர்தலில் ஜெயித்தவர்களெல்லாம் சென்னைக்குப் போய் மாலைவரும் வழிமேல் விழி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாலை யார் கழுத்தில் விழுகிறதோ தெரியவில்லை. ஆனால் இம்முறை மாலை வாங்கினவர்கள், மாதவிமாலை பெற்றகோவிலன், "கழுத்திலவிழுந்த மாலை கழற்றமுடியவில்லை" யென்று மாதவி பால் நின்று மிகுந்த கஷ்டங்களடைந்ததைப்போல் மந்திரிபதவி ஏற்போர் பல கட்சிகளுக்குள்ளிருந்து சிறிது கஷ்டமில்லாமலேனும் சமாளிக்க முடியாது. அதற்காகத்தான் இதுசசக்கும் புளிக்குமென்று புறங்காட்டுகிறார்களேயன்றி உள்ளத்தில் பாலோடு பழமும் சாப்பிடத்தான் எண்ணம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சென்னை சட்டசபை.

### மந்திரி சபை நிர்ணயம்.

### பலதரப்பட்ட அபிப்பிராயங்கள்.

(நமது ராஜீய நிருபர் எழுதுகிறார்.)

சமீபத்தில் நமது சென்னை மாகாண முழுவதும் நடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற அபேக்ஷகர்களில் சுயராஜ்யக் கட்சியாரே அதிகமாயிருக்கிறார்கள். ஆனால் இக்கட்சியார் இதர கட்சிக்காரர்களைக் காட்டிலும் தனித் தனியான எண்ணிக்கையில் அதிகத் தொகையினராயிருந்தாலும், சட்டசபையின் மொத்த அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக விருக்கவில்லை. மொத்தம் 127 ஸ்தானங்களில் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் 31 ஸ்தானங்கள் போக தேர்தலுக்காக ஏற்பட்டிருக்கும் 96 ஸ்தானங்களில், சுயராஜ்யக் கட்சியார் 47 ஸ்தானங்களை அடைந்திருக்கிறார்கள். மற்ற கட்சிகளான சுயேச்சையும், ஜஸ்டிஸும் 49 ஸ்தானங்களை ஏறக்குறைய சமமாக அடைந்திருக்கின்றன வென்று சொல்லலாம். இதில் எந்தக் கட்சியார் மந்திரி சபையை அமைப்பார்களோ வென்ற பிரச்னை தான் தற்சமயம் சென்னை மாகாணம் பூராவையும் அலைத்துக் கொண்டிருக்கிறது. சென்ற ஆறு வருடகாலமாக ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக பனகால் ராஜாவின் தலைமையின் கீழ் மந்திரி சபை நடைபெற்று வந்தது. இப்போது ஜஸ்டிஸ் கட்சியினர் சிறுபான்மையினராக விருப்பதால் இனியேல் மந்திரி சபை யாரால் அமைக்கப்படுமென்பதைப் பற்றி தேச மகாஜனங்கள் அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்தக்கட்சியினர் தொகையில்பெரும்பான்மையினராகவிருக்கின்றார்களோ, அக்கட்சியினரைத்தான் கவர்னர் அழைத்து மந்திரி சபையை அமைக்கும்படி கேட்பது வழக்கம். அதன்படி கவர்னர் லார்டு கோஷன் இவ்வாரத்தில் சுயராஜ்யக் கட்சியின் சார்பாக ஸ்ரீமான் நரசிம்மராஜூ அவர்களை அழைத்து மந்திரி சபை அமைப்பதைப் பற்றி ஆலோசித்தார். ஆனால் ஸ்ரீமான் நரசிம்மராஜூ தமது கட்சியைக் கலந்து சொல்லுவதாகத் திரும்பிவந்துவிட்டார். அதன் பின் சுயராஜ்யக் கட்சிக் கூட்டம் கூடி ஆலோசனை செய்தார்கள்.

சுயராஜ்யக் கட்சியார், உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளுவதில்லை என்றும், கவர்ன்மெண்டாருக்கு எதிர்க் கட்சியாக விருந்து, கவர்ன்மெண்டு மசோதாக்களைத் தோற்கடிப்பதும், பொதுஜன நன்மைக்கான தீர்மானங்களை ஆதரித்து நிறைவேற்றுவதுமான காரியங்களைச் செய்வோமென்று ஓட்டர்களிடத்தில் தேர்தலின்போது வக்குறுதி செய்தார்கள். ஆனால் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குள் உத்தியோக மயக்கம் வந்து இடையிடையே குழுக்கிடுகிறது. மற்றக் கட்சியினரைக் காட்டிலும் தொகையில் பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், மந்திரி சபையும் கிட்ட நெருங்கின பருவமாயிருக்கிறது. கவர்னரும் சுயராஜ்யக் கட்சியினரை அழைக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது. இதோடு மாகாணத்தின் பலபாகங்களிலிருந்தும், சுயராஜ்யக் கட்சியார் மந்திரிசபை அமைத்துக் கொள்ளுவதற்கு ஆதரவான கூக்குரல்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால் தங்கள் கட்சிக்கூட்டத்தில் உத்தியோகம் ஏற்கக்கூடாதெனத் தீர்மானித்து கவர்னருக்கு பதிலுமிறுத்திவிட்டனர். இந்தநிலைமையில், சுயராஜ்யக் கட்சியார்ஓட்டர்களிடம்சொன்ன உறுதிமொழிப்படி மந்திரி உத்தியோகம் எங்களுக்கு வேண்டாமென்று சொல்லிவிடாமலும், ஆங்காங்கு எழும் ஆதரவான கூக்குரல்களை போலிச் சாக்காக வைத்துக் கொண்டு மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ள முடியாமலும், மதில் மேல் பூனைகள் மாதிரி அஸாம் காங்கிரஸ் வரையும் கவர்னர் மந்திரி சபையின் முடிவுக்குக் காத்திருக்க மாட்டாரா வென்று எதிர்பார்த்துக் கொண்டு, வெளிக்கு மந்திரி பதவி வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியதிருக்கிறது. கவர்னர் கூப்பிடுவதற்கு முன்னமே கட்சிக் கூட்டம் கூட்டி எப்படியும் உத்தியோகம் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று தீர்மானித்து கவர்னர் அழைத்த மாத்திரத்திலேயே இந்தப் பதிலைச் சொல்லியிருந்தார்களானால் இவர்களுக்கு உத்தியோக மயக்கிருப்பதாகச் சந்தேகிக்க இடமில்லை. "அவர் சொல்லுகிறார்" இவர் சொல்லுகிறார் என்ற சாக்கை வைத்துக்கொண்டு எப்படியாவது உத்தியோகம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான் சுயராஜ்யக் கட்சியாரில் பலருக்கு விருப்பம். இவர்கள் மந்திரி பதவியை பரிபூரணமாக தியாகஞ் செய்து விட்டார்கள் என்று நம்புவதற்கு யாதொரு ஹேதுக்களுமில்லை. "அஸாம் காங்கிரஸ் வரையும் கவர்னர் காத்திருக்கக் கூடாதா? அதுவரையும் நிர்வாகத்தை நடத்த கவர்னருக்கு வேறு வழியில்லையா?" என்று பிரபல பத்திரிகைகள் தலையங்கங்களில் குறிப்பிட்டு எழுதுவதிலிருந்து இக்கட்சியாருக்கு உத்தியோக ஆசை மனதிற்குள்ளிருக்கிறதென்று தான் தீர்மானிக்க வேண்டியதிருக்கிறது.

இந்நிலைமையில் இதுவிஷயமாய்ராஜீயத் தலைவர்களின் மனப்போக்கைத் தனித்தனியாகக் கவனிப்போம்.

#### ஸ்ரீமான் சத்திய மூர்த்தி.

இவர் தேர்தலுக்கு முன்னால் மந்திரி பதவி ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தொண்டை கட்டும் வரை பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். தான் போட்டியில்லாமல் தேர்தெடுக்கப்பட்ட உற்சாகத்தில் பஞ்சாப்பிற்குப் போய் உத்தியோகம் ஏற்கக் கூடாதனதைப் பற்றி வியாக்கியானம் செய்தார். ஆனால் தேர்தலுக்குப்பின்னால் இரண்டு வாரமாக இவருடைய பேச்சு மூச்சைக் காணோம். தன் கட்சியினர் சிறிது பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மந்திரி உத்தியோகம் கிட்ட வந்த உடனே, மயக்கத்தில் மௌனமாயிருக்கிறார் போல் தெரிகிறது. பழைய பிரசங்கமும், வியாக்கியானமும் இது சமயம் இல்லாமல் போவது விசனிக்கத்தக்கதுதான்.

#### ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார்.

இவர் உத்தியோகம் ஏற்கக் கூடாதென்ற பிரச்னையில் மனவுறுதியுடனிருக்கிறார் என்று சொல்ல வேண்டியதிருக்கிறது. இவர் தான் தேர்தலில்வெற்றிபெற்ற உடனேயும் உத்தியோகம் ஏற்கக் கூடாதென்று வற்புறுத்திப் பேசினார். அதையொட்டி அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார். ஆனாலும், அஸாம் காங்கரஸில் இவருடைய அக்கிராசனப்பிரசங்கத்தின் போக்கைக்கவனித்தே, இவருடைய மனப்போக்கை நிர்ணயிக்க முடியும்.

#### ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார்.

இவருக்கு பழைய பனகால் ராஜா மறுபடியும் மந்திரிசபையை அமைத்துவிடக்கூடாதென்பதில் தான் அதிக விருப்பம். இதோடு இவர் நின்றிருந்தால் நலமாயிருந்திருக்கும். ஆனால் அஸாம் காங்கரஸ்வரையும் மந்திரி சபையின் முடிவுக்கு கவர்னர் காத்திருக்கக்கூடாதாவென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுவது போன்று தன் பத்திரிகையான சுதேசமித்திரனில் தலையங்கம் எழுதுகிறார். இந்த அரிய யோசனையை இவர் கவர்னருக்கு கூறியிராவிட்டால், இவரையும் உத்தியோக மயக்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டியது வராது.

#### ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலுநாயுடு

இவர் முன்னுக்குப் பின் முரண்பட்ட அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டிருப்பதாகவே நினைக்கவேண்டியதிருக்கிறது. தேர்தலுக்கு முன் ஜஸ்டிஸ்கட்சியும் சுயராஜ்யக்கட்சியும் தேசத்திற்கு நலம் விளைக்கக்கூடியதல்ல; ஜஸ்டிஸ்கட்சி வலுக்குமானல் கவர்ன்மெண்டு பலப்பட்டுக்கொண்டு பிராமண்யம் பழையபடி பரவிவிடும்; ஆகையால் ஓட்டர்கள் இரண்டுகட்சிகளையும் ஆதரிக்கக்கூடாதென்று சொன்னார். அதோடு, சுயராஜ்யக்கட்சியைத்தான் சிறிதுபலமாகத்தாக்கி எழுதியும் சுயராஜ்யக்கட்சியார் சிறிது பெரும்பான்மையினராக வந்ததும், சுயராஜ்யக்கட்சிதான் மந்திரிசபையை அமைக்கவேண்டுமென்று ஸ்ரீமான் சத்திய மூர்த்தியை வேண்டிக்கொள்கிறார்.

(வரும்.)

## நாடார் மஹாஜன சங்கம்.

### ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் பண்டு.

### அபிவிர்த்திசெய்யும்மார்க்கம்.

மதுரை நாடார் ஊழியப்பிரசாரசபை, காரியதரிஸிகள் 25—11—26-ல்

மதுரை நாடார்மஹாஜன சங்கத்துக்கு பின் வருமாறு ஒருகடிதம் எழுதி யனுப்பியிருக்கிறார்கள்.

ஐயன்மீர்!

நமது நாடார்மகாஜனசங்கம், ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி கடவுளின் கிருபையால், ஒழுங்காக நடைபெற்று வெற்றியுற்றதையறிந்து சந்தோஷிக்கிறோம். அதன் மூலம் ஸ்காலர்ஷிப் நிதிக்கு கிடைத்திருக்கிற வருமானம் ரூ 35,000-த்தை எவ்விதம் அபிவிருத்தி செய்வதென்பதை ஆலோசனை செய்து, அதற்கான காரியங்களைச் செய்து முடிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நிதியை விருத்திசெய்வதற்கு பலர் பலவாறாக அபிப்பிராயங்களைக் கூறலாம். பாங்குகளிலோ, தனவந்தர்களிடமோ வட்டிக்குக் கொடுப்பதாயின் குறைந்த பக்ஷம் 6 மாசத்திற்கொரு தடவைதான் வட்டிகிடைக்கும். கொஞ்ச விசேஷவட்டி வருமானத்தைக்கருதி வருஷத்தவணைக்குப் போவதாயின், ஒரு வருடத்திற்குப் பிறகுதான் வட்டி ரூபாயை வாங்கமுடியும். இவ்விதம் 6மீ முடிவிலும், 12மீ முடிவிலும் வட்டிவாங்க முடிவதால் அதைக்கொண்டு மாணவர்களுக்கு மாசாமாசம் ஸ்காலர்ஷிப் கொடுக்க சௌகரியப்படாது. வட்டிக்குக்கொடுக்கும் பணத்துக்கு மீ 1-க்கு ரூ 100-க்கு ரூ 0—10—0 வட்டிகிடைப்பது பிரயாசைதான். வட்டிக்குக் கொடுத்த பணம், கொடுத்த அளவிலேயே இருந்துவருமே தவிர அதிலிருந்து; விசேஷமாக அபிவிருத்தியடைவதற்கு மார்க்கம் ஏற்பட மாட்டாது.

பொதுப்பண்டுப் பணங்களை ரொக்கமாக வைத்திருப்பதால், அப்பண்டின் தருமகைங்கரியத்திற்கும், அப்பண்டை சேகரித்து வைத்தபொது ஜனங்களின் ஐக்கியத்திற்கும், ஒரு காலத்தில் ஆபத்தை விளைவிக்க அனுகூலமாகவிருப்பது யாவருக்கும் தெளிவாகத் தெரிந்தவிஷயமாக இருக்கிறது. நம் ஸ்காலர்ஷிப் நிதியை ரொக்கமாக வைத்திருக்கும் பக்ஷத்தில் நம் சங்கத்தின் கோரிக்கைக்கும், அபிவிருத்திக்கும், மாணவர்களின் தேவைக்கு மாசாமாசம் சப்ளை செய்வதற்கும் அனுகூலமில்லாதிருப்பதால் எங்களது அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ள முன் வந்துள்ளோம்.

அதாவது தற்காலத்தில் இந்த ஸ்காலர்ஷிப் நிதியின் பணத்தைக் கொண்டு, மதுரையில் 5000 ரூபாய்க்கு குறையாததும் 10,000 ரூபாய்க்குமேற்படாததுமான நல்ல நிலைமையிலுள்ள கெட்டி மனைவீடுகள், கடைகள், கிட்டங்கிகள் கிரயத்திற்குவாங்கி வாடகைக்கு விட்டு அதன்மூலம் மாசா மாசம் கிடைக்கும் வாடகைவருமானத்தைக்கொண்டு, மாணவர்களுக்குக்கவலையில்லாமல் மாசாமாசம் ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டும். இச்சமயத்தில் இம்மதுரைநகரில் நல்லகட்டடங்கள் சகாயமான விலைக்குக் கிடைக்கக்கூடிய நிலைமையிலிருக்கின்றன.

இப்போது முப்பத்தையாயிரத்துக்கு வாங்கும் சொத்துக்கள், இதற்குப்பத்தாவது வருடத்தில் எழுபதினாயிரத்திற்கு விலைமதிப்பு ஏற்படுவதோடு, அதில் இப்போது வரும் வாடகையைக்காட்டிலும்; பத்தாவது வருடத்தில் இரட்டிப்பு வாடகை வருமென்பதிலும் கொஞ்சமும் சந்தேகமேயில்லை.

மேற்கூறிய காரணங்களால், மாசாமாசம் கவலையில்லாமல் ஸ்காலர்ஷிப் சப்ளை செய்யவும் சொத்தின் மதிப்பும், வாடகைமதிப்பும் ஓட்டிக்கிரட்டியாகி. சங்கத்துக்கும், நாடார் மகாஜனங்களுக்கும் விசேஷ செல்வாக்கு ஏற்படவும் பண்டு பணம் விசேஷ அபிவிருத்தியடையவும் மிகவும் அனுகூலமாகவிருப்பதால் அடுத்து நடைபெறும் கவுன்ஸில் மீட்டிங்கில் இதை பப்ளிக்காக வாசித்துக்காட்டி எங்கள் ஆலோசனையை ஆதரித்து ஸ்காலர்ஷிப் நிதியை வளர்பிறைச் சந்திரனைப்போல் பிரகாசிக்கும்படி செய்யக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

## வாலிபநாடார்சங்கம், மதுரை.

### கவுன்ஸில் மீட்டிங்.

இச்சங்கம் திருவாகசபையின் பொதுக்கூட்டம் நாளது அக்ஷயஸ்ரீ கார்த்திகைமீ 6உ (21—11—26.) இரவு பத்து மணிக்கு மதுரை கீழமாசி வீதி தனலெக்ஷுமிலாட்ஜில் நடைபெற்றது. ஆஜரான மெம்பர்கள். பெ. சு. பெரியசாமிநாடார், கூ. அ. சங்கரலிங்கநாடார், ப. வ. சோமசுந்தரநாடார், ஆ. சு. ஆறுமுகநாடார், சு. சுப்பையநாடார் மு. கி. சின்னச்சாமிநாடார், செ. கு. முத்துக்கண்நாடார், ப. ரா. முத்துச்சாமிநாடார்.

ஸ்ரீமான் பெ. சு. பெரியசாமிநாடார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

இன்று தெய்திவரை சங்க திருவாகிகளிடமிருந்து வரும் ரூ 525—8—0ல் தூத்துக்குடி நாடார் பாங்கில் சங்கம் வைஸ்பிரஸிடெண்டு ஸ்ரீமான் பெ. சு. பெரியசாமிநாடார் அவர்கள் பெயருக்கு ஒரு வருஷத்தவணைக்கு வட்டிக்கு கொடுப்பதென தீர்மானிக்கப்பெற்றது.

தனலெக்ஷிமிலாட்ஜிலுள்ளநமது சங்கத்தை கீழப்பேட்டை ஹாலிலுள்ள அறையில் நாளது அக்ஷயஸ்ரீ கார்த்திகைமீ 24உயில் திறந்து வைப்பதென்று தீர்மானிக்கப்பெற்றது.

சங்கத்திற்கு பத்திரிகைகள் இனாமாய் வரவழைத்துக் கொடுத்துவரும் கனவான்களுக்கு வந்தனம் செலுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. சுதேசமித்திரன் பத்திரிகை வரவழைக்கவும், பியூன் 5 ரூபாயில் அமர்த்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்துடன் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுபெற்றது.

பெரியசாமிநாடார்,
கவுன்ஸில் சேர்மன்.

## திருநெல்வேலி ஜில்லா எலெக்ஷன் விபரம்.

### ஒவ்வொரு அபேக்ஷகருக்கும் கிடைத்திருக்கும் மோத்தவாக்குகள்.

| | |
|---|---|
| 1. ஸ்ரீமான்கள், திவான்பகதூர் குமாரசாமிரெட்டியார், | 16126 |
| 2. சா தூகணபதிபந்துலு, | 6077 |
| 3. சிதம்பரநாதமுதலியார், | 11151 |
| 4. ஸர். சிவஞானம்பிள்ளை, | 8306 |
| 5. துரைச்சாமிநாடார், | 5612 |

ஒவ்வொருவருக்கும் வாக்குக் கிடைத்திருககும் விபரங்களாவன.

| | |
|---|---|
| 1-வது இனத்துக்கு மட்டும் | 470 |
| 1-க்கும் 2-க்கும் சேர்த்து | 1702 |
| 1-க்கும் 3-க்கும் ,, | 10098 |
| 1-க்கும் 4-க்கும் ,, | 2819 |
| 1-க்கும் 5-க்கும் ,, | 1037 |
| 2-வதுக்கு மட்டும் | 2069 |
| 2-க்கும் 3-க்கும் சேர்த்து | 242 |
| 2-க்கும் 4-க்கும் ,, | 1154 |
| 2-க்கும் 5-க்கும் ,, | 887 |
| 3-வதுக்கு மட்டும் | 165 |
| 3-க்கும் 4-க்கும் ,, | 552 |
| 3-க்கும் 5-க்கும் ,, | 92 |
| 4-வதுக்கு மட்டும் | 2934 |
| 4-க்கும் 5-க்கும் சேர்த்து | 843 |
| 5-வதுக்கு மட்டும் | 2719 |

குறிப்பு;—இரண்டு இனம் குறிப்பிடப்பட்டவைகள் இரண்டுஓட்டுச்செய்யப்பெற்றவைகள். தனிஇனமாகவுள்ளவை தனி ஓட்டுச்செய்யப்பட்டவைகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# சென்னைசட்டசபைத் தேர்தல்.

## திருநெல்வேலிஜில்லாவிபரம்.

## நம்மவர்களின் மோசமும், ஏமாற்றமும்.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

திருநெல்வேலி ஜில்லாவின் கிராமத் தொகுதியின் பலன் தெரிந்துவிட்டது. ஸ்ரீமான்கள் குமாரசாமி ரெட்டியாரும், சிதம்பரநாத முதலியாரும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர். ரெட்டியாரும் முதலியாரும் முறையே 16126, 11151 ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். இவ்வாண்டில் போலிங் ஸ்டேஷனுக்குச் சென்று "ஓட்" கொடுத்தவர்களின் தொகை 27822 பேர் ஆவர். முந்திய ஆண்டைப் பார்க்கிலும் இவ்வாண்டில் சுமார் 5000 பேர் அதிகமாக வந்து வாக்குக் கொடுத் திருக்கின்றனர் என்று தெரிகிறது. மற்றும் ஸ்ரீமான்கள் சிவஞானம் பிள்ளை, சாது கணபதி பந்துலு, அரி. அ. சு. துரைசாமி நாடார் ஆகிய மூவருக்கும் முறையே 8306, 6077, 5612 ஓட்டுகள் கிடைத்திருக்கின்றன. நமது நாடார் தான் கடைசியில் நிற்கின்றார்.

சென்னை மாகாண அபிவிருத்தி இலாகா மந்திரியும், "சர்" "திவான் பகதூர்" 'நைட்' முதலிய கௌரவ பட்டங்கள் பெற்றவரும், சென்ற ஆண்டில் இந்த ஜில்லாவில் முதன்மையாய் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், திருநெல்வேலிஜில்லா சைவ வேளாள குலத்தினராகிய பிள்ளைமார்களுக்கே சொந்தமென்று கருதிய ஓர் குலத்தில் தோன்றியவருமாகிய ஸ்ரீமான் டி. யன். சிவஞானம்பிள்ளை தோற்கடிக்கப்பட்டுப்போனார். இதிலிருந்து நமது கதியாதாகும் என்று யூகித்துணர்ந்துகொள்ளலாம்.

ஸ்ரீமான் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள் ஸ்ரீமான் டி. யன். சிவஞானம் பிள்ளையை தோற்கடிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடேயே ஆதிமுதல் வேலைசெய்து வந்திருக்கின்றார். அந்த நோக்கத்துடனேயே ஸ்ரீமான் சிதம்பரநாத முதலியாரவர்களை தனக்குத் துணை சேர்த்திருக்கின்றார். ஸ்ரீமான் முதலியாரவர்களுக்கு கிடைத்திருக்கும் ஓட்டில் 1053 ஓட்டுமாத்திரமே முதலியாருடைய சொந்த ஓட்டு என்று சொல்லலாம். 10098 ஓட்டுகள் ஸ்ரீமான் ரெட்டியாரவர்கள் மூலமாகக் கிடைத்தவைகள்.

ஆதியிலிருந்து அவர்கள் இருவரும் மிகவும் மனமொத்து ஒன்று பட்டு வேலை செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினரால் நிறுத்தப்பட்ட ஸ்ரீமான் நாடார் அவர்களும், பந்துலு அவர்களும், ஆதியிலிருந்தே பிளவு பட்டு வேலைசெய்துவந்தார்கள் என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அதன் காரணம் பலவுள.

நடந்திருக்கும் தேர்தல் நிலைமையைப்பார்க்கும் போது ஸ்ரீமான் நாடார் அவர்களும், பந்துலு அவர்களும் ஒன்று பட்டுவேலை செய்திருந்தாலும் பலன் கிட்டாது. அப்படிவேலை செய்திருந்தால் இப்போது நடந்திருக்கும் தேர்தல் போக்கின்படி ஸ்ரீமான் பந்துலுவுக்கு 8488 ஓட்டுகளும், ஸ்ரீமான் நாடார் அவர்களுக்கு 8023 ஓட்டுகளுமே கிடைத்திருக்கும்; ஜெயம் பெற வழியுமில்லை.

"பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறும்" என்றபடி ஸ்ரீமான் ரெட்டியாரவர்களின் அபார சக்தியினால் ஸ்ரீமான் முதலியாரவர்கள் ஜெயம் பெற்றனர்.

ஆகவே நடந்திருக்கும் தேர்தல் போக்கிலிருந்து திருநெல்வேலி ஜில்லாவில் நாடார் ஓட்டுகள் 15000 இருக்குமானால் ஒரு நாடார் வெற்றிபெற வழியுண்டு.

இது நிற்க, நமது குலத்தில் சில கோடரிக்காம்புகள் இல்லாமலில்லை. அக்காம்புகள் ஏனைய நான்கு அபேட்சகருக்கும் நம்மவர்கள் ஓட்டுக் கொடுக்கவற்புறுத்தியிருக்கின்றன.

இதர சகோதர வகுப்பினரை நம்பி படுமோசம் போன தோஷமும் நமக்குண்டு. ஒருவகையில் நம்மவர்கள் மோசமும் மற்றொருவகையில் நாம் ஏமாற்றமடைந்தும போனோம் என்பதற்கையமில்லை என்ற போதிலும் பொதுவாக யாரையும் குறைகூறுவதற்கில்லாத நிலையில் தேர்தல்போக்கு முடிந்திருக்கிறது.

நம்மவர்களின் ஜாதீய உணர்ச்சி இவ்வாண்டில் மிகவும் அதிகமாகவேயிருந்தது. இதன் பலனாக சில பெரியோர் தாக்கப்பட்டனர். தாக்கப்பட்டுவருகின்றனர் என்பதையும் அறிவோம். அதனால் ஒருபயனுமில்லை.

நாடார் ஒருவர் திருநெல்வேலி ஜில்லாவில் வெற்றிபெற வேண்டுமானால் பதிவு செய்யப்படாத நமது குலத்தவர்களை ஓட்டர் ஜாபிதாவில் பதிவு செய்விக்கும் வேலையில் இப்போதிருந்தே நமது குலத்தவர்களும், நமது மகாஜன சங்கமும் நன்கு கவனம் செலுத்தவேண்டும். இதன் சம்பந்தமாய் தலைவர்களின் அபிப்பிராயம் என்னவென்பதை மகாஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

# "ஸத்திய தரிசனம்"

## பிரிவு 11 அத்தியாயம் 26.

பிரிட்டிஷ் அரசியலிடம் என்னைவிட அதிக பக்தியுடையவர்கள் எவரையும் நான் பார்த்ததேயில்லை. எனக்கு அவ்வளவு ஆழ்ந்த பக்தி ஏற்பட்டிருந்ததற்கு ஸத்தியத்தில் எனக்குள்ள நம்பிக்கையே காரணமென்று இப்போது எனக்குத் தெரிகிறது. ராஜபக்தியோ அல்லது வேறெந்த நற்குணமோ உண்மையில் இல்லாதிருக்கையில் இருப்பதுபோல் பாசாங்கு செய்ய எனக்கு ஒருபோதும் சாத்தியமாயிருந்ததில்லை. நேட்டாலில் நான் சென்ற ஒவ்வொரு கூட்டத்திலும் ராஜவாழ்த்து பாடப்பட்டது. அப்போது நானும்சேர்ந்து பாடவேண்டும்போல் எனக்குத் தோன்றியது. பிரிட்டிஷ் ஆக்ஷியில் உள்ள குறைகள் எதுவும் எனக்குத் தெரியாமலிருந்துவிடவில்லை. ஆனால் பொதுவாக அதை ஏற்கலாமென்றுதான் தோன்றியது. அந்தக் காலத்திலெல்லாம் பிரிட்டிஷ் ஆக்ஷி பொதுவாக ஜனங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய தென்றே கருதினேன்.

தென் ஆப்பிரிக்காவில் நான் கண்ட நிறத்துவேஷம் பிரிட்டிஷ் பரம்பரை வழக்கத்திற்கு விரோதமான தென்றும், தற்காலிகமாகவே உள்ளதென்றும், சீக்கிரம் மறைந்துவிடுமென்றும் கருதினேன். ஆகையால் ராஜபக்தியில் ஆங்கிலேயருடன் நான் போட்டி போட்டேன். மிகுந்த பிரயாசைப் பட்டு "வாழ்க வாழ்கவே" என்ற ராஜவாழ்த்துப்பாட்டின் வர்ண மெட்டைத் தெரிந்து கொண்டு, அது பாடப்பட்ட விடத்திலெல்லாம் நானும் சேர்ந்து பாடினேன். விசேஷ ஆர்ப்பாட்டமின்றி ராஜபக்தியைத் தெரிவிக்க அவகாசமேற்பட்ட போதெல்லாம் நான் அதில் கலந்துகொண்டேன். என்னுடைய வாழ்வு காலத்தில் ஒரு சமயத்திலும் நான் இதைச் சொந்த லாபத்திற்காக உபயோகித்துக்கொண்டதேயில்லை. அது எனக்கு ஒரு கடமையாகவே தோன்றியது. பிரதியுபகாரம் எதையும் எதிர்பாராமலே நான் அதை அனுஷ்டித்தேன்.

விக்டோரியா மகாராணியின் டயமண்டு ஜுபிலி (60-ம்வருஷக்)கொண்டாட்டத்திற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த சமயத்தில் நான் இந்தியாவிற்கு வந்துசேர்ந்தேன். ராஜ்கோட்டில் இதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியில் சேருமாறு என்னைக் கேட்டுக்கொள்ளப் பட்டது. நான் அதற்குச் சம்மதித்தேன். ஆனால் இந்தக் கொண்டாட்டம் ஒரு ஆடம்பரமான காக்ஷியாகவே இருக்குமென்று எனக்கு ஒரு சந்தேகமிருந்தது. அதில் மோசடி அதிகமாக இருந்ததால் எனக்கு மிகுந்த வருத்தமேற்பட்டது. கமிட்டியில் மெம்பராக இருப்பதா வேண்டாமா என்று நான் யோசிக்க வாரம்பித்தேன். முடிவில் என்வேலையைச் செய்து விட்டுச் சும்மாவிருப்பதென்று தீர்மானித்துக்கொண்டேன். மரங்களை நடுவதும் யோசனைகளுள் ஒன்றாக விருந்தது. பவிசு ஆடம்பரத்திற்காகவும் உத்தியோகஸ்தர்களைத் திருப்தி செய்வதற்காகவும் இவ்வாறு செய்தனர். மரத்தை நடுவது ஒருயோசனையே ஒழிய கட்டாயமல்லவென்று நான் எடுத்துக்கூறினேன். உண்மையாக அதை நடத்திவைக்கவேண்டும், அல்லது சும்மா விட்டுவிட வேண்டும் என்று நான் கூறியதைச் சிலர் பரிகாசம் செய்தனர். என்னிடம் கொடுத்த மரத்தை நான் பக்தியுடன் நட்டேன். பிறகு அதற்கு ஜாக்கிரதையாக ஜலம்விட்டு வளர்த்தேன்.

என்னுடைய குடும்பத்தில் குழந்தைகளுக்கும் நான் ராஜவாழ்த்துப் பாட்டைச் சொல்லிக் கொடுத்தேன். உள்ளூர் போதனு கலாசாலை மாணவர்களுக்கும் நான் அதைச் சொல்லிக் கொடுத்ததாக ஞாபகமிருக்கிறது. ஆனால் ஜுபிலிக் கொண்டாட்டத்தின் போது சொல்லிக் கொடுத்தேனே அல்லது ஏழாவது எட்வர்டு சக்கரவர்த்தியின் பட்டாபிஷேகத்தின் போதாவென்று இப்போது எனக்கு ஞாபகமில்லை. பின்னர் எனக்கு அதுவெறுப்பை யுண்டுபண்ண ஆரம்பித்தது. அஹிம்ஸா தர்மத்தில் எனக்கு நம்பிக்கை வலுக்க வலுக்க நான் பேசும் போதும் யோசிக்கும்போதும் அதிக உஷாராகவாரம்பித்தேன். ராஜவாழ்த்துப் பாட்டில் "அவருடையசத்ருக்களைச் சிதறவடித்து அவர்களை ஒழிக்கவேண்டும்; எதிரிகளுடைய தந்திரங்களைப் பலிக்காமற் செய்யவேண்டும்" என்ற பாகம் என்னுடைய அஹிம்ஸா தர்ம உணர்ச்சிக்கு விரோதமாகத் தோன்றியது. அஹிம்ஸா தர்மத்தில் நம்பிக்கை யுடையவர்கள் இந்த வரிகளைப் பாடுவது பொருத்தமல்லவென்று டாக்டர் பூத்தும் என்னுடன்ஒப்புக்கொண்டார். எதிரிகள் இருப்பதாயும் அவர்கள் அயோக்கியர்களென்றும் நாம் எவ்வாறு நினைத்துக்கொள்ளுவது? அவர்கள் சத்துருக்கள் என்பதற்காக அவர்கள் செய்வது தவறாகத் தானிருக்கவேண்டுமோ? கடவுளிடத்தில் நாம் நியாயம் வழங்குமாறு தான் கேட்கலாம். டாக்டர் பூத் என்னுடைய அபிப்பிராயத்தைப் பூராவாக ஆதரித்தார். அவர் தமது கூட்டங்களில் பாடுவதற்காகபதில் ஸாகித்யம் ஒன்றை எழுதினார். ஆனால் அவரைப்பற்றிப் பிறகு அதிகம் கூறுகிறேன்.

ராஜபக்தியைப்போல் பிணியாளர்களுக்குச் சிச்ருஷை செய்யும் குணமும் எனக்கு இயற்கையாக இருந்தது. நண்பர்களாயிருந்தாலும் புதிய மனிதர்களாயிருந்தாலும் சிச்ருஷை செய்ய எனக்கு அதிக ஆவலுண்டு.

ராஜ்கோட்டில் தென் ஆப்பிரிக்காவைப்பற்றிய பிரசுரத்தை யெழுதிக் கொண்டிருக்கையில் நான் அவசரமாக ஒரு தடவை பம்பாய் சென்று வந்தேன். நகரங்களில் பொதுக்கூட்டம் நடத்திப் பொது ஜனங்களுக்கு விஷயத்தை எடுத்துச்சொல்ல வேண்டுமென்று நான் உத்தேசித்தேன். பம்பாய் நகரத்தைத்தான் முதலாவதாகப் பொறுக்கினேன். முதலில் நான் ஜஸ்டிஸ் ரானடேயைக் கண்டு பேசினேன். நான் கூறியவற்றை அவர் கவனித்துக்கேட்டுவிட்டு ஸர். பிரோஸ்ஷா மேட்டாவைச் சந்திக்குமாறு யோசனை கூறினார். மறுநாள் நான் ஜஸ்டிஸ் பத்ருதீன் டயாப்ஜியைச் சந்தித்தேன்: அவரும் இதே மாதிரி கூறினார், "ஜஸ்டிஸ் ரானடேயும் நானும் உங்களுக்குக் கொஞ்சம்தான் வழி காட்டலாம். எங்கள் நிலைமை உங்களுக்குத் தெரியும். நாங்கள் பொது விஷயங்களில் கலந்துகொள்ள முடியாது. ஸர் பிரோஸ்ஷா மேட்டாதான் திட்டமாக உங்களுக்கு வழி காட்டக் கூடியவர்" என்று அவர் கூறினார்.

ஸர் பிரோஸ்ஷா மேட்டாவைப் பார்க்கத்தான் நானும் விரும்பினேன். ஆனால் இந்தப் பெரியவர்களெல்லாம் அவருடைய யோசனைப்படி நடக்குமாறு எனக்குக் கூறவே, பொது வாழ்வில் அவருக்குள்ள செல்வாக்கை பூராவும் நான் உணர முடிந்தது. காலக்கிரமத்தில் நான் அவரைச் சந்தித்தேன். அவர் முன் பயந்து நிற்க நான் தயாராகவிருந்தேன். அவருக்குப் பம்பாய்ச் சிங்கமென்றும், பம்பாய் மகாண முடிசூடா மன்னரென்றும் ஜனங்களால் பட்டமளித்திருப்பதை நான் தெரிந்துகொண்டிருந்தேன். ஆனால் அவர் என்னை அடக்கிவிடவில்லை. அன்புள்ள பிதா தனது வயது வந்த பிள்ளையைச் சந்திப்பது போல் அவர் என்னைச் சந்தித்துப் பேசினார். அவருடைய ஆபீஸில் நாங்கள் சந்தித்தோம். பல நண்பர்களும் சிஷ்யர்களும் சுற்றிலும் கூடியிருந்தனர். ஸ்ரீமான்கள் டி. இ. வாச்சா, காமா முதலியவர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஸ்ரீமான் வாச்சாவைப்பற்றி நான் முன்னதாகவே கேள்விப்பட்டிருந்தேன். அவர் ஸர் பிரோஸ்ஷா மேட்டாவின் வலதுகை மனிதராகக் கருதப்பட்டார். அவர் புள்ளி விவரங்களில் பெரிய நிபுணரென்று ஸ்ரீமான் வீர்சந்தகாந்தி என்னிடம் கூறினார். "காந்தி! நாம் மறுபடியும் சந்திக்க வேண்டும்" என்று ஸ்ரீமான் வாச்சா கூறினார். இந்த அறிமுகப் பேச்செல்லாம் இரண்டு நிமிஷநேரம் பிடித்திருக்கும். ஸர் பிரோஸ்ஷா மேட்டா நான் கூறியதை எல்லாம் கவனமாகக் கேட்டார். ஜஸ்டிஸ் ரானடே, ஜஸ்டிஸ் டயாப்ஜி இருவரையும் பார்த்ததாக நான் கூறினேன். "காந்தி! நான் உங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. நான் இங்கு ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்" என்று அவர் சொன்னார். இவ்வாறு கூறிவிட்டு அவர் தமது காரியதரிசி, ஸ்ரீமான் முன்ஷியைப் பார்த்து கூட்டத்திற்கு தேதி குறிப்பிடும்படி கூறினார். தேதி நிர்ணயிக்கப்பட்ட பின் அவர் என்னை வழியனுப்பினார். கூட்டத்திற்கு முதல்நாள் தம்மைச் சந்திக்கும்படி அவர் என்னிடம் கூறினார். என்னுடைய பயம் நீங்கி சந்தோஷத்துடன் வீட்டிற்குச் சென்றேன்.

நான் பம்பாய்க்கு இதற்காகச் சென்றிருந்தபோது என்னுடைய சகோதரியின் புருஷரைச் சென்று பார்த்தேன். அவர் தேக அசௌக்கியமாகவிருந்தார். அவர் பணக்காரரல்ல. என் சகோதரி அவருக்குச் சிச்ருஷை செய்யச் சக்தி பெற்றிருக்கவில்லை. வியாதி கடுமையாக இருந்ததால நான் அவரை ராஜ்கோட்டிற்கு அழைத்துச் செல்லுவதாகக் கூறினேன். அவர் சம்மதித்தார். அவரையும் என் சகோதரியையும் அழைத்துக் கொண்டு ஊருக்குச் சென்றேன். நான் எதிர்பார்த்ததைவிட வியாதி அதிக காலமிருந்தது. என் சகோதரி புருஷரை என் அறையில் படுக்கவைத்து இரவு பகலாக அவருடனிருந்து சிச்ருஷை செய்துகொண்டே என் தென்ஆப்பிரிக்கா வேலையும் நான் கவனிக்க வேண்டியிருந்தது. முடிவாக அவர் இறந்துவிட்டார். அவருடைய கடைசிக்காலத்தில் நான் அவருக்கு சிச்ருஷை செய்ய முடிந்தது எனக்குப் பெரிய ஆறுதலாக விருந்தது.

சிச்ருஷை செய்வதில் எனக்குள்ள பிரியம் வரவர அதிகரித்து ஒரு பெரிய சக்தியாகிவிட்டது. இதன் பயனாக நான் என்னுடைய வேலையையும் சில சமயங்களில் அலக்ஷியம் செய்ய நேர்ந்தது. பல சமயங்களில் என் மனைவியை மாத்திரமின்றி வீட்டிலுள்ளவர்கள் எல்லாரையும் நான் அவ்வேலையில் அமர்த்தினேன். இம்மாதிரி சேவையில் ஒருவர் உற்சாகம் கொள்ளுவதாக விருந்தாலொழிய அதற்கு அர்த்தமே இல்லை. பகட்டிற்காவது பொதுஜன அபிப்பிராயத்திற்குப் பயந்தாவது அதைச் செய்வதானல் அது மனிதரைக் கட்டைப்படுத்தி அவருடைய உணர்ச்சியையும் நசுக்கிவிடுகிறது. சந்தோஷத்துடன் செய்யப்படாத சேவை எதுவும் செய்பவருக்காவது, அதை ஏற்பவருக்காவது உதவியளிப்பதில்லை. ஆனால் உண்மையான சந்தோஷ உணர்ச்சியுடன் சேவை செய்யப்படும்போது மேது சுகங்களும் இதர விஷயங்களும் மறைந்து விடுகின்றன.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை

## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-வரு மே மீ 4 உ க்கு பிரபவ வரு சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | |
|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ | 1500 |
| 3-வது பிரைஸ் | ரூ | 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ | 500 |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ | 400 |
| 100 ரூ-ல் 5-க்கு | ரூ | 500 |
| 50 ரூ-ல் 20-க்கு | ரூ | 1000 |
| 20 ரூ-ல் 50-க்கு | ரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்கு | ரூ | 1000 |
| 5 ரூ-ல் 200-க்கு | ரூ | 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு | ரூ | 1800 |
| 2 ரூ-ல் 2400-க்கு | ரூ | 4800 |
| ஆக பிரைஸ்கள் 3381-க்கு | ரூ | 17500 |
| புக் 1500-க்குக் கமிஷன் | ரூ | 3000 |
| குமஸ்தா சம்பளம், அச்சுக் கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் | ரூ | 1800 |
| தனிப் பிரைஸ் | ரூ | 1700 |
| பண்டுக்கு | ரூ | 9000 |
| ஆக | ரூ | 33000 |

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையானால் ஈவுப்படி பண்டுக்கும், செலவுக்கும் போக மீதத் தொகையை 4 ரூபாய்ப் பிரைஸ்களாக எடுக்கப்பெறும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்துக்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வெளியூர் புள்ளிகளுக்கு மணியாடர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பக்கூடும்.

சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கட்ட வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

மதுரை நாடார் மகாஜன சங்கம் முக்கியஸ்தர்களை அழைப்பித்து அவர்கள் முன்னிலையில் அருப்புக்கோட்டை, "நாடார் குல மித்திரன்" ஆபீஸில் பிரைஸ் எடுக்கப் பெறும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

| | | |
|---|---|---|
| 1-வது பிரைஸ் | ரூ | 100 |
| 2-வது பிரைஸ் | ரூ | 50 |
| 3-வது பிரைஸ் | ரூ | 20 |
| 4-வது பிரைஸ் | ரூ | 15 |
| 5-வது பிரைஸ் | ரூ | 10 |
| 6-முதல் 10 வரை 5 வீதம் | ரூ | 25 |
| 11-முதல் 750-வரை 2 வீதம் | ரூ | 1480 |
| ஆக | ரூ | 1700 |

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்ந்து கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5 ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம். தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினால் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானால் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

குறிப்பிட்ட 4—5—27-க்கு 15 நாளைக்கு முன்னதாகவே பணமும், கவுண்ட்டர்பாயிலும் கிடைக்கும்படி அனுப்பித் தர வேண்டும். நேரில்ச் செலுத்த விரும்புவோர் ரசீது வாங்கிக் கொண்டு செலுத்த வேண்டும்.

புஸ்தகம் விற்பனை செய்தவர்களுக்கு பிரைஸ் சாபிதா தயாரானவுடன் அனுப்பக் கூடும். தனியாய் வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.

சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

டில் இது நடத்திவைக்கப்படவே இல்லை.

### "தீண்டாத" வகுப்பின் வாசஸ்தலம்.

"தீண்டாத" வகுப்பினர் வீடுகளையும் கமிட்டி மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தது. அங்கு, கமிட்டியின் ஒரு மெம்பர்தான் என்னுடன் வரச் சம்மதித்தார். மற்றவர்களுக்கு அந்தப் பிரதேசத்திற்குச் செல்லுவதும், அதிலும் கக்கூஸ்களைப் பார்ப்பதும் மகா மூடத்தனமாகத்தோன்றியது. ஆனால் எனக்கு அந்தப் பிரதேசத்தின் நிலைமை மிகுந்த ஆச்சரியமுண்டுபண்ணியது. இம்மாதிரிப் பிரதேசத்திற்கு நான் அப்போதுதான் முதல் தடவையாகச் சென்றேன். அங்கு ஸ்திரீகளும் புருஷர்களும் எங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அவர்களுடைய கக்கூஸ்களைப் பார்க்க எங்களை அனுமதிக்கும்படி நான் ... அவர்கள் ஆச்சரியமடைந்து, 'எங்களுக்கா கக்கூஸ்? நாங்கள் திறந்த வெளிகளுக்குச் சென்று தான் மலஜலபாதைகளைக் கழிப்பது வழக்கம். உங்களைப்போன்ற பெரிய மனிதர்களுக்கல்லவா கக்கூஸவேண்டும்' என்று கூறினார்கள்.

"அப்படியானால் உங்கள் வீடுகளை நாங்கள் பார்ப்பதில் ஏதாவது ஆக்ஷேபமுண்டா?"

"குஷாலாகப் பாருங்கள். எங்கள் வீடுகளின் ஒவ்வொரு மூலைமுடுக்கையும் நீங்கள் பார்க்கலாம். அவை வீடுகளல்ல. வெறும் பொந்துகளே" என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

உள்ளே சென்று பார்த்தேன். வெளிப்பக்கத்தைப்போல் உட்பக்கமும் சுத்தமாக இருந்ததைக் கண்டேன். உட் செல்லும் பாதைகளெல்லாம் நன்றாய்க் கூட்டப்பட்டிருந்தன! தரையெல்லாம் பசுவின் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. அங்குள்ள சில பானைகளும் தட்டுகளும் சுத்தமாயும் பிரகாசமாயுமிருந்தன. இந்தப் பிரதேசத்தில் பிளேக் வருமோவென்ற

### மேல் வகுப்பினரின் அசுத்தம்.

மேல் வகுப்பினர் ஜாகையில் நான் பார்த்த ஒரு கக்கூஸைப்பற்றிச் சற்று விரிவாகக் கூறாமலிருக்க முடியவில்லை. ஒவ்வொரு அறையிலும் ஒரு சாக்கடை இருந்தது. ஜலபாதைக்கும் தண்ணீருக்கும் அதுவே உபயோகப்பட்டது. அதனால் வீடு முழுவதும் துர்காற்றுப் வீசிக்க முடியவில்லை. ஒரு வீட்டில் படுக்கையறை மாடியிலிருந்தது. அங்குள்ள சாக்கடை, மலபாதை ஜலபாதை இரண்டிற்கும் உபயோகிக்கப்பட்டது. அந்த சாக்கடையின் குழாய் தரை வரையில் கொண்டு வந்து விடப்பட்டிருந்தது. அந்த அறையில் துர்காற்றத்தைப் பொறுக்கவே முடியவில்லை. அங்கு உள்ளவர்கள் எனனமாகத் தூங்கமுடியுமென்பதை வாசகர்களே நினைத்துப் பார்த்துக் கொள்ளட்டும்.

### ஒரு கோவில்.

முக்கிய வைஷ்ணவக் கோவிலாகிய "ஹாவலி"யையும் கமிட்டிசென்று பார்த்தது. அந்தக்கோவில் குருக்கள் என் குடும்பத்திற்குச் சிநேகமானவர். ஆகை ... அவர் அனுமதித்ததோடு சீர்திருத்த யோசனைகள் கூறியதையும் கேட்டுக் கொண்டார். "ஹாவலி"யின் ஒரு பாகத்தை அவரே பார்த்ததில்லை. அங்கு தான் குப்பைகளும், சாப்பாட்டு இலைகளும் சுவற்றிற்கு மேலாக எறியப்படுவது வழக்கம். காக்கைகளும் பருந்துகளும் அங்கு வாசம் செய்தன. கக்கூஸ்கள் அசுத்தமாகத்தானிருந்தன. எங்களுடைய யோசனைகள் எவ்வளவு தூரம் நடத்திவைக்கப்பட்டனவென்று பார்க்க நான் ராஜ்கோட்டில் அதிககாலம் தங்கவில்லை.

பூஜை பிரார்த்தனை முதலியவை நடக்கும் ஒரு இடம் இவ்வளவு அசுத்தமாக இருந்தது எனக்கு மிகுந்த வருத்தமுண்டுபண்ணியது. சுகாதாரவசதிகளைப்பற்றியவிதிகள் புண்ணிய ஸ்தலத்தில்கண்டிப்பாக அனுஷ்டிக்கப்பட்டிருக்குமென்றேஎவரும்எதிர்பார்ப்பார்கள். ஸ்மிருதிகளை எழுதிய பெரிய மகான்கள் வெளியும் உள்ளும் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று நன்றாக வற்புறுத்தியிருப்பதை நான் அப்போதுமறிவேன்.